# விவேக போதினி.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்

தொகுதி 1 } 1908-௵ அக்டோபர் ௴ { பகுதி 4

## பக்தி மார்க்கம்
## THE PATH OF DEVOTION

இங்கு முன் சொல்லாது விட்டிருப்பதாகிய நமது மதத்தின் ஓர் பாகமான பக்திமார்க்கத்தைப்பற்றி விவரித்து, முடிவில் நமது மதபாகங்களின் ஒழுங்கை நன்கு விளக்குவோம்.

மனிதர்களில் மனோதர்மபேதம் அதிகமாய்க் காணப்படுகிறது. இவர்களுள் தாழ்ந்த நிலையில் இருப்பவர், நாம் ஆராதிக்கும் கடவுளுக்கு பலிமுதலியன கொடுக்காவிட்டால் நம்மை அத்தெய்வங்கள் மிகக் கஷ்டப்படுத்துமென்ற பயத்தோடு, பூஜை முதலியவைகள் போடுகிறார்கள். இதுவுமல்லாமல் உலகில் சிலகாலத்துநிகழ்கின்ற இடி விழல் முதலிய பௌதிக இடையூறுகளும், வாந்திபேதி, வைசூரி முதலிய கொள்ளை நோய்களும், இன்னும் ஜனங்களுக்கு வரும் பொதுவான கெடுதிகளும், தான் வழிபடும் கடவுளது கோபத்தால் வருவதென்றெண்ணி, அந்தக் கோபத்தை சாந்தப்படுத்தும்பொருட்டு அக்கடவுளை ஆராதனை செய்கிறார்கள். இவர்களுக்குக் கடவுள் ஸுகத்தைக் கொடுப்பர் என்ற எண்ணமே கிடையாது. அவர் கோபித்துக்கொண்டு நமக்கு தீங்கு உண்டாக்காமலிருந்தால் போதும் என்பதே இவரது எண்ணம். இது தான் பயஸம்பந்தமான பக்தி. ஸகல மதங்களும் இங்கிருந்து தான் முதலில் ஆரம்பிக்கவேண்டும். இந்நிலையில் இருக்குமொருவனைக் கீழ்வகுப்பில் படிக்கும் ஒரு சிறுவனுக்குச் சமானமென்று சொல்லலாம். ஏனெனில் அச்சிறுவன் (பின்னால் நற்குணம் நிறைந்த பெரிய கனவானாகும் திறம் உடையவனாக இருந்தபோதிலும்) நாம் குற்றம் செய்தால் உபாத்தியாயருக்குக் கோபமுண்டாய், அவர் நம்மை அடிப்பார் என்று பயந்து குற்றம் செய்யாது நல்லவழியில் இருப்பதுபோல், இந்தத் தாழ்ந்த நிலையிலிருக்கும் மனிதனும் பயத்தால் நல்ல காரியங்களைச் செய்துகொண்டு வருகிறான்.

வேறு சிலர் தாழ்ந்த தேவதைகளை வணங்காது, திரிமூர்த்திகளையும், அவர்களைப்போன்ற கருணாநிதியாகிய ஸாத்விக தேவதைகளையும், தங்கள் பூஜையினுடைய ஆடம்பரத்திற்குத் தக்கபடி மேல்மேலான இஹலோக பரலோக ஸுகங்களை யடையவேண்டுமென்ற ஆவலோடு ஆராதிக்கிறார்கள். இந்தப் பாகம் தான் உலகெங்கும் இருக்கும் மதங்களுடைய முக்கியமான பாகம். குழந்தை பிறக்கவேண்டுமென்று இராமேச்வரம் செல்பவர்களும், வியாதி நிவிருத்தியாகவேண்டுமென்று கோவிலில் ஆராதனை செய்பவர்களும், "எங்களுக்கு அன்றன்று அப்பத்தை அன்றன்று

தாரும்" என்று முறையிடும் ஜாதியார்களும், ஸ்வர்க்க லோகத்தில் தேவமாதரால் ஸுகங்களடையவேண்டுமென்ற ஆவலோடு மணிகளைத் தள்ளிக்கொண்டு ஜபம் செய்யும் ஜாதியார்களும், இதுபோன்ற உலகத்தவருள் பெரும்பாலாரும், இந்த பாகத்தைச் சேர்ந்தவர்களே. இந்தப் பாகம் பல சரக்கு வியாபாரம் போன்றது. இதைச் சேர்ந்தவர்கள் தமது கடவுளை நோக்கி "கடவுளே! உமக்கு நாம் இந்தப் பூஜையைத் தருகிறோம், அதற்குப்பதிலாக எவ்வளவு ஸுகம் உம்மால் கொடுக்க முடியுமோ அவ்வளவையும் கொடுக்க வேண்டும்" என்று கேட்கிறார்கள். இதற்குக் காம்பபக்தி என்று பெயர். முன்சொன்ன சிறுவன் மேல்வகுப்பிற்கு வரும்பொழுது, எவ்வாறு இருப்பானோ அவ்வாறே இந்தப் பாகத்தைச் சேர்ந்தவர்கள் இருப்பார்கள். மேல் வகுப்பில் வரும்பொழுது வரவரச் சிறுவனுக்கு உபாத்தியாயரிடத்திலிருக்கும் பயம் நீங்கி, தன்னுடைய நன்னடத்தையாலும், விடா முயற்சியாலும், உபாத்தியாயரை மகிழச் செய்து, அவர் தன்னைப்பற்றி மாறாத நல்ல அபிப்பிராயம் உடையவராய் இருக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு வேலை செய்கிறான். அச்சிறுவனுக்கு இங்கு உபாத்தியாயரிடத்தில் இருந்தபயம் இல்லாமலே போகும். உபாத்தியாயர் தன்னை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்ற எண்ணத்தோடு தன்னைக் கண்டித்து வருகிறார், என்று அறிந்து அவன் அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறானே ஒழிய, அவரிடத்திருக்கும் பயத்தினால் அவ்வாறு நடப்பவனல்ல. இதுபோலவே இந்நிலையிலுள்ள பக்தனும் நடந்துகொள்ளுகிறான்.

வேறுசிலர் பரம்பொருளை ஒரே தெய்வமாகக் கருதி கைம்மாறு கருதாது வழிபட்டு வருகிறார்கள். இதற்கு அகாம்ய பக்தி என்று பெயர். முன் சொன்ன பாகங்களிலுள்ள பயாம்சமும், கைம்மாறு கருதும் அம்சமும் இந்தப் பாகத்திலில்லை. மஹாதர்மிஷ்டரான தர்மபுத்திரர் தமது ஸகோதரரான துரியோதனனியரால் துரத்தப்பட்டு இமயமலைச்சாரலில், தமது தம்பிமார் நால்வர், பத்தினி திரௌபதி ஆகிய இவர்களோடு, வனவாஸம் செய்யும் காலத்தில், ஒருநாள் திரௌபதி அவரைப்பார்த்து, "நீங்கள் இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் காலத்திலும் கடவுளை மறவாது பக்தி செய்து வருகிற தெவ்வாறு?" என்று வினவினாள். அதற்கு யுதிஷ்டிரர், "பெண்ணே! இதோ இந்த இமயமலையைப் பார். எவ்வளவு மனோரம்யமாய் இருக்கிறது; எனக்கு இதை எப்பொழுதும் பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும் என்ற ஆவல் உண்டாகின்றது. எனக்கு ஏதாவது இந்த மலை பிரதியுபகாரம் செய்கின்றதா? அப்படி இருந்தபோதிலும், கம்பீரமாயும், மனோரம்யமாயும், இருப்பவைகளிடத்தில் ஆவலிருப்பது என் ஸ்வபாவம், ஆனதினாலே நான் இதனை மிக விரும்புகிறேன், இதுபோலவே நான் கடவுளையும் பக்திசெய்கிறேன் அவர் இந்த உலகிலுள்ள ஸகல காம்பீர்யத்திற்கும் அழகிற்கும் மூலகாரணம். மெய்யன்போடு விரும்பத்தக்க வஸ்து கடவுள் ஒருவரே. அவரை விரும்புவது என்னுடைய ஸ்வபாவம். ஆகையால் நான் அவரை பக்தி செய்கிறேன். இப்படிச் செய்வதற்கு நான் ஒரு கைம்மாறும் அபேக்ஷிக்கவில்லை. இப்படிப் பக்தி செய்வதே எனக்கு திருப்தியாயும் ஸுகமாயும் இருப்பதால் நான் இவ்வாறு இருக்கிறேன். இந்தப் பக்தியை வியாபார ரூபமாய்க் கைம்மாறு கருதிச்செய்வது என்னால் முடியாது" என்று மறுமொழி சொன்னார். இதுவே இந்த மூன்றாவது விதமான பக்தியின் ஸ்வரூபம். இந்த விதமான மெய்யன்பு அதிகரித்துவிட்டால் பக்தர்களுக்கு அடங்கா ஆவல் உண்டாய்விடும். இந்நிலையில் சிலர் கடவுளது வாகனமாய் விடவேண்டுமென்றும், சிலர் அவர் கழுத்தில் அசைந்தாடும் ஆபரணமாய் விடவேண்டும் என்றும் விரும்புவார்கள். இந்த மாதிரியான மெய்யன்பு மேலிட்டதினாலேயே, குலசேகரப் பெருமாளும் பின் வருமாறு பாடி இருக்கிறார்:

"ஆனாதசெல்வத் தரம்பையர்கடற்சூழ ;
வானாளும் செல்வமுமண்ணரசும் யான்வேண்டேன்;
தேனார்பூஞ் சோலைத் திருவேங்கடச்சுனையில்;
மீனாய்ப்பிறக்கும் விதியுடையேன் ஆவேனே.

செடியாய வல்வினைகள் தீர்க்குந் திருமாலே
நெடியானே ! வேங்கடவா ! நின்கோயில்வாசல் ;
அடியாரும் வானவரு மரம்பையரும் கிடந்தியங்கும்;
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே."

இம்மாதிரியான பக்தியினாலேயே கடவுளைப் பற்றிப் "பேசாதநாளெல்லாம் பிறவாநாளே" என்றும்,

"மாசில்வீணையும் மாலைமதியமும் ;
வீசுதென்றலும் வீங்கிளவேனிலும் ;
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே ;
ஈசனெந்தை இணையடி நீழலே."

என்றும் அப்பரும் பாடி இருக்கிறார். பெரிய புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிற நாயன்மார்களும், பக்தவிஜயத்தில் சொல்லப்பட்டிருக்கிற பக்தர்களும், இந்நிலையி லிருப்பவர்களே. இந்நிலையில் இருக்குமொருவன் எம். ஏ. வகுப்பில் படிக்கும் சிறந்த மாணாக்கனுக்கு ஒப்பாவான். இம்மாணாக்கனுக்கு உபாத்தியாயரிடத்தி லிருந்த பயமும், அவர் தன்னைப்பற்றி வைத்துக்கொண்டிருந்த நல்ல அபிப்பிராயம் மாறாது இருக்கவேண்டுமென்ற எண்ணமும் போய், தான்படிக்கும் விஷயத்தில் அதிகப்பிரீதி உடையவனாகி, அதனை உண்டாகும்படி செய்த உபாத்தியாயரிடம் உண்மையான பக்தியுடையவனாய் இருப்பான். இதுபோலவே இருப்பான் இந்த மூன்றாம் வகுப்பை யடைந்த பக்தனும்.

இப்பொழுது சொன்ன மார்க்கங்களில் எல்லாம், ஆராதிக்கும் தேவதா பேதத்தினாலும், நானாவித ஆராதனைக் கிரமங்களினாலும், மனதை முதலில் குவியச்செய்து பின்பு விகசிக்கும்படி செய்யும் நானாவித வழிகளினாலும், அநேகவிதமான உட்பிரிவுகள் ஏற்பட்டு, அநேகவித மதங்கள் உண்டாகின்றன. இம்மாதிரியான பிரிவுகளையும் உட்பிரிவுகளையும் உற்று நோக்கும் ஒருவன், மனங்குழம்பி, "இவ்விதமாய்ப் பேதப்பட்டுள்ள கொள்கைகளையெல்லாம் எப்படி ஒரே மதத்தின் பாகங்கள் என்று சொல்லலாம், என்று சங்கிக்கலாம். எவர் எப்படி சங்கித்த போதிலும், இவைகளெல்லாம் ஹிந்துமதத்தின் பாகங்களென்றும், அவைகள் மனிதர்களுடைய நன்மைக்கு அத்தியவசியமானவை என்றும், இதுவரையிலும் எழுதிவந்தவைகளை வாசித்தவர்களுக்கு ஒருவாறு விளங்குவது திண்ணம். மேலும் நமது கைகால் முதலிய அவயவங்கள் எவ்வளவு மாறுபாடுள்ளனவாய் அமைந்திருந்த போதிலும், அவை நமது தேகத்திற்கும், மனத்திற்கும் ஒவ்வொரு விதத்தில் உபயோகமுள்ளவைகளாய் இருக்கின்றன. இதே மாதிரியாய் மேலான நிலையைநோக்கிச்செல்லும் வழியில், நமக்கு ஹிந்து மதத்தினுடைய ஒவ்வொருபாகமும் ஒவ்வொரு ஸோபானமாய் இருந்து நம்மை வரவர மேலேறும்படி செய்கின்றது. ஆகவே நமது ஹிந்து மதம் ஒரு ஒழுங்கான சாஸ்திரம். இந்தச் சாஸ்திரத்தில் பயாம்சமுள்ள பாகத்தை பாலசிக்ஷைபாகவும், ஈசனை உண்மையாய் அறிந்து அநுபூதிவாய்ந்திருத்தலை பிரௌட சிக்ஷையாகவும் சொல்லலாம். இந்த மதத்தில் அடங்கிய பாகங்களைப் படிகளாக்கி இந்த மதத்தை நன்றாக இயற்றி அமைத்த ஒரு ஞான ஸோபானம் என்றும் சொல்லலாம். ஆகையால் இந்த மதத்தினுடைய பாகங்களை நன்றாகப் பரிசோதித்துப் பார்த்தால், உலகத்திலுள்ள மதங்களை எல்லாம் பரிசோதித்ததாகும். மதத் துவேஷம் என்ற பிசாசம் தானே நம்மை விட்டகலும் நமக்கு ஸகலவித நன்மைகளும் உண்டாகு மென்பதற்கு ஸந்தேகமே இல்லை.

அடுத்த ஸஞ்சிகையில் இவ்வளவு விரிவை உடைய நமது மதத்திற்குத் தக்கபெயர் இன்னது என்ற விஷயத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்வோம்.

ஏ. எஸ். கஸ்தூரிரங்கன் B.A., L.T.

# நாடகத் தமிழ்

## TAMIL DRAMATIC LITERATURE

ஐஸ்லாண்டு (Iceland) தேசத்துப் பாம்புகளைப்பற்றி எழுதப் புகுந்த ஒருவன், அத்தேசத்தில் பாம்புகளேயில்லையென்று எழுதி முடித்ததாக ஓர் கதையுண்டு. அது போல், நாடகத் தமிழைப் பற்றி எழுத வாரம்பித்து நாடகத்தமிழே கிடையாது என்று முடித்திடலாம் ஓர் நியாயம் பற்றி. நாடகத்தமிழ் என எதை நாம் தற்காலம் கூறக்கூடும்? சுமார் இருபது வருடங்களாக ஆங்கிலேயம் கற்றறிந்த சிலர், அப்பாஷையிலுள்ள நாடகங்களை முன்னிட்டு, சில நாடகங்கள் தமிழில் எழுத ஆரம்பித்திருப்பது அனைவரும் அறிந்த விஷயமே. அதற்கு முன் அரிச்சந்திரவிலாசம், ராமநாடகம், வீரகுமாரநாடகம், பார்த விலாசம், மார்க்கண்டேயர்நாடகம், டம்பாச்சாரி விலாசம் முதலிய தெருக் கூத்துகளையே நமது தமிழ் பாஷையில் நாடகத்தமிழ் என்னும் பிரிவிற்கு உதாரணமாக எடுத்துக் கூற வேண்டியிருக்கின்றது. அதற்கு முன் சற்றே ஆராய்வோமாயின் அடியுடன் ஒன்றுமே கிடையாது! நாடகத் தமிழைப் பற்றி ஆராயுங்கால் முதலில் இதைப் பற்றி ஆராயவேண்டியது அதி அவசியமாகின்றது. தற்காலத்திய பாஷை நூற்புலவர்களுள் அனேகர் தமிழ் பாஷையானது மிகவும் புராதனமானதென்றும் வடமொழியாகிய ஆரியம் அல்லது சம்ஸ்கிருதம் தென் இந்தியாவிற்கு வருமுன்னமே தமிழ்பாஷையானது மிகுந்த அபிவிர்த்தி அடைந்திருந்ததென்றும் ஒப்புக்கொள்ளுகின்றனர். ஆகவே தமிழ் பாஷையானது, இந்நாட்டில் குறைந்த பட்சம் இரண்டாயிரம் வருடங்களாகப் பரவி நின்றது என்று எல்லோரும் ஒப்புக் கொள்ள வேண்டியதே. இப்பழமொழியாகிய தமிழ்மொழி தொன்றுதொட்டு இயல், இசை, நாடகம், என மூவகையாய்ப் பிரிக்கப்பட்டிருப்பதும் தமிழ் வல்லார் அனைவரும் அறிந்த விஷயமே. அங்ஙனமிருக்க நாடகத் தமிழிற்கு பழமையான ஒரு உதாரணமும் கிடைக்காதிருப்பதற்குக் காரணம் யாது? நமது பழய கவிகள் தமிழில் நாடகம் ஏன் ஒன்றேனும் எழுதவில்லை? அன்றேல், அவர்கள் எழுதியும் அவைகளெல்லாம் காலகதியால் இறந்து கண்ணுக்குப் புலப்படாதபடி போயினவா? இவ்விஷயங்களையெல்லாம் தமிழ் பாஷையின் அபிவிர்த்தியில் ஊக்கமுடைய ஒவ்வொருவனும் விசாரித்தறியவேண்டியது முக்கியமே. முதலில், தமிழ்பாஷைக்கு நாடகம் என்பதே கிடையாது, சம்ஸ்கிருதம் தமிழுடன் சம்பந்தப்பட்ட பிறகே இயல் இசை நாடகம் என்னும் பிரிவு உண்டாயது, என்று ஸ்தாபித்துப் பார்ப்போம். இங்ஙனம் கூறுவதற்கு 'நாடகம்' என்னும் பதமே ஓர் துணையாகலாம். அது சம்ஸ்கிருத பதமே; ஆயினும் தமிழிற்கே உரிய 'கூத்து' என்னும் பதமொன்றிருக்கிறது. தமிழ் நூற்களுள் அதிக பழமையானது என்று பலரும் ஒப்புக்கொள்ளத்தக்க அரியபெரிய நூலாகிய திருவள்ளுவரது குறளுள்,

"கூத்தாட்டவைக் குழாத்தற்றே பெருஞ்செல்வம்
போக்குமது விளிந்தற்று"

என்பதில் கூத்தாட்டவை, என்பது நாடகமாடும் சபையையே குறித்ததாகக் கொள்ள வேண்டி வருகிறது. அன்றியும் இந்துமதமானது இங்கு பரவுவதற்கு முன் சமணமதமே பரவி நின்றது. ஆகவே சமணநூற்களே தமிழ் பாஷையில் பழமையான நூற்கள் என்று கூறும் சார்பார் நியாயத்தைக் கருதுமிடத்தும், சீவகசிந்தாமணி, நாலடியார், முதலிய ஜைன சமண நூல்களிலும், அக்காலத்தில் கூத்தாகிய நாடகங்கள் நடந்தேறியதாக நாம் கண்டறிகிறோம். இவைகளெல்லாமின்றி முத்தமிழ் என்னும் சொற்றொடரினாலேயே, நாடகத்தமிழ் என்னும் ஓர் பிரிவு இருந்ததாக நாம் ஒப்புக்கொள்ள வேண்டிவருகிறது. "இலக்கியங் கண்டதற்கிலக்கணம் கூறல்" என்னும் முறைமைபற்றி, மூவகையாக வழங்கிய தமிழை, முத்தமிழ் எனக் கூறியுள்ளார் என்றும், நாடகத்தமிழ் என்று ஒன்று புராதனமாக தமிழ்

நாடு உடைத்தாயிருந்ததென்றும் நாம் ஒப்புக்கொள்ளவேண்டியவர்களாகின்றோம்.

ஆயினும் ஒருவிஷயத்தைப்பற்றி ஆராயப்புகின் இரண்டு பட்சத்து நியாயங்களையும் பட்சபாதமின்றி கவனிக்கவேண்டியது நமது கடைமையாகையால், நாடகத்தமிழ் என்று பழமையாக தமிழ் நாட்டிற் கிடையாது என்று கூறுவதற்கு என்னென்ன நியாயங்கள் இருக்கின்றன என்பதையும் ஆராய்வோம். இங்ஙனம் கூறுபவர்களுடைய முக்கியமான நியாயம் முன்னமே தெரிவித்தபடி நாடகத்தமிழ் பழமையாய் இத்தேயத்தில் வழங்கி வந்திருக்குமாயின், இவ்விரண்டாயிரம் ஆண்டு, இங்கு பிறந்திறந்த கவிகளுள், எவனேனும் தமிழ் பாஷையில் நாடகம் ஏதேனும் எழுதியிருக்கமாட்டானா? அநேக விதமான நூல்களையெல்லாம்செய்த நமது கவிரத்னங்களாகிய, கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி முதலியோர், நாடகம் ஒன்றேனும் ஏன் இயற்றவில்லை? என்பதேயாம். இது ஓர் முக்கியமான ஆட்சேபனை என்று நாம் ஒப்புக்கொள்ள வேண்டியதே. இதற்குத் தக்கபதில் கூறுவிடின் முன்னேகூறிய நமது கோட்பாடுதான் சரியானது என்று நாம் ஸ்தாபித்தலரிது. இதனை மறுக்கும் நியாயங்களை பிறகு மறவாது கவனிப்போம்.

இச்சார்பார் கூறிடும் இரண்டாவது நியாயம் யாதாமெனில், நாடகத் தமிழ் தொன்றுதொட்டு வழங்கி வந்திருக்குமாயின், எதற்கும் இலக்கணம் வகுத்த நமது முன்னோர், நாடகத் தமிழிற்கும் இலக்கணம் கூறியிருக்கமாட்டார்களா? நாடகத்தமிழிற்கு இலக்கணமே காணப்படாததனால் நாடகத்தமிழ் என்பது புராதனமாய் வழங்கியதன்று, என்பதாகும். இதனையும் ஒரு முக்கியமான நியாயமாக நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியதே; ஏனெனில் வடமொழியாகிய சம்ஸ்கிருதத்தில் அநேக நாடகங்களிருக்கின்றன. அந்நாடக இலட்சணங்களைக் குறித்திடும் நூல்களுமிருக்கின்றன. நாடகம் என்பது இன்னது, அது இத்தனை வகைப்படும், நாடகத்தின் நாயகன் இப்படிப்பட்டவனாயிருத்தல் வேண்டும், நாயகி இத்தன்மையாயிருத்தல் வேண்டும், இன்னும் இப்படிப்பட்ட பலவிஷயங்களுக்கும் இலக்கணம் சம்ஸ்கிருதத்திலுண்டு; தமிழிலோ ஒரு சூத்திரமும் கிடையாது. நாம் தற்காலமறிந்தவரை, இது உண்மையே. நாடகத்தமிழ் இந்நாட்டில் பழமையாயுள்ளது என்பார் இந்த ஆட்சேபனைக்கும் தக்க பதில் கூறிடக் கடைமைப்பட்டிருக்கின்றனர்.

இன்னுமொரு நியாயம், நமது பழய நூல்களில் 'கூத்து, கூத்து' என்று கூறியதெல்லாம் ஒருவனோ பலரோ, கைகால்களை அசைத்து, நடனம் செய்வதேயொழிய ஓர் கதையை முன்னிட்டு, அக்கதா புருஷர்களையும் பெண்டிரையும் பாத்திரங்களாக வகுத்து, பாத்திரங்களுக்குத் தக்கவேடம் தரித்து, வசன மூலமாகவோ பாட்டு மூலமாகவோ, அக்கதையை நடப்பிக்கும் தற்காலத்தில் நாம் அறிந்தபடி நாடகமாடுதல், அன்று என்று கூறுவார். கூத்து என்பது 'குரவைக்கூத்து முதலிய கொண்டாட்டங்களேயொழிய, நாடகங்கள் அன்று' என்பார். இச்சார்பார் கூத்து என்னும் பதத்திற்கு, ஒருவன் சந்தோஷத்தினாலோ, வெறியினாலோ, வெற்றி மகிழ்ச்சியினாலோ, குதித்தாடலையே கூத்தென்பார் போலும். இதை வடமொழியார் 'நிருத்தம்' என்பார்.

இனி இம்மூன்று ஆட்சேபனைகளையும் தனித்தனியே எடுத்தாராய்ந்து, தக்க பதில் கூறப்புகுவோம்.

ப. ச.

# ராஜா ராம் மோஹன ராய்

## RAJA RAM MOHAN ROY

*(A Life - Sketch).*

---

"யாதானும் நாடாமால்; ஊராமால்; என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு?"

என்பது குறள்.

அதாவது "படித்தவனுக்கு எந்நாடும் தன் நாடாகும்; எவ்வூரும் தன் ஊராகும். ஆனதினால் என் ஒருவன் சாகும்வரை படியாமலிருப்பது?" என்பதுதான் இக்குறளின் கருத்து. இதற்கு ஏற்ற லக்ஷணம்போல் நின்றவர், நமது தேசத்தில் பலருண்டு. கம்பர், காளமேகர், காளிதாஸர் முதலியோரது கதைகளெல்லாம் அறியாதவர் ஒருவருமில்லை. ஷேக்ஸ்பியர் என்பவர் யார் என்று தெரியாதவர் ஒருவருமில்லை. நமது காலத்திலும் இராஜா ராம மோஹன ராய் என்பவர் பெருமை உலகப்ரக்யாதியாய் விளங்குகிறது. படிப்பென்கிற மோஹனாஸ்திரம் அவரை மயக்கி உருக்கினதுபோல் யாரை உருக்கும்!

எங்கெங்கு நிச்சயமுண்டு, எங்கெங்கு உட்பொருளுண்டு, எங்கெங்கு நியாயவிசாரமுண்டு, எங்கெங்கு நியாயமுண்டு, அங்கங்குசென்று பேராசையோடு கற்கவேண்டுமென்கிற ஆவலோடு வாழ்ந்த இந்த மஹான், வங்காளத்தில் வர்த்தமானபுரம் (Burdwan) என்கிற ஜில்லாவிலுள்ள இராதாநகரத்தில் பிரம்ம குலத்தில் பிறந்தவர். 'விளையும் பயிர் முளையிலே' என்கிற மாதிரி இவர் தமது ஏழாம் பிராயத்திலேயே தன் தேசபாஷையைக் கற்று மஹா நிபுணராகிவிட்டார். அப்பொழுது இவர் தகப்பனார் லாகோருக்குப் போகவேண்டி வந்தமையால் அங்கு ராமமோஹனராயும் போகநேர்ந்தது. அவர் அச் சிறுவயதிலேயே ஆரபிபாஷையைக் கற்றார். அக்காலங்களில் அவர் கிரேக்க (Greek) பாஷையிலிருந்து மொழிபெயர்த்த க்ஷேத்ரகணிதம் (Geometry) முதலிய புஸ்தகங்களையும் படிக்கநேர்ந்தது. மதியூகியாய் கணித சாஸ்திர வல்லவராய் அச்சிறு வயதிலேயே விளங்கினார்.

புத்தி சூட்சமம் என்கிற விதையானது எத்தகைய தரிசு நிலத்தில் விதைத்தாலும் அதற்கு வேண்டிய சாரத்தை அது எங்கிருந்தாவது அடைந்து பெருமையுடன் வளர்வது அதன் ஸ்வபாவம். இதுவே பெரியோரின் லக்ஷணம்; எவ்வித கடினமான சங்கதியை அறியவேண்டுமென்றாலும் அதைப் பெரியோர் தாமே கஷ்டப்பட்டு அறிவார்கள். இந்த ஸ்வபாவத்துடன்கூட பெற்றோர் வளர்க்கையும் அமைந்து பொருந்தினால், பின் பெருமைகொண்டு பிரகாசிப்பது கஷ்டமாகுமா? ராமமோஹனரும் அவர் தகப்பனாரால், சிறு பிராயம் முதல் தன் மத சாஸ்திரமுதலியவெல்லாம் உணர்த்தப்பட்டு, ஈசுவரபக்தி அதிகரிக்க, சாஸ்திரவாராய்ச்சிக்கு உபயோகமாகும்படி ஸ்ரீகாசிக்குச்சென்று ஸம்ஸ்கிருதங் கற்று அப்பாஷையிலும் பாண்டித்ய மடைந்தார். இவர் மதக்கோட்பாடுகளைப் பற்றி தம் தகப்பனாரோடு அடிக்கடி வாதிப்பது வழக்கம். அவ்வாறு செய்ததில் சில விவாதங்கள் ஏற்பட்டன. அதன்மேல் இவருக்கு தன்னூரிலிருக்க மனமில்லாமல், வேறு மதங்களைப் படித்தறியவேண்டுமென்ற பேராவல் தூண்ட, தேச சஞ்சாரம்செய்துகொண்டு, கடைசியாக இமயமலைக்கு வடக்கிலுள்ள திபேத்துதேசம்போய்ச்சேர்ந்தார். ஆங்கு ஜனங்கள் அவலம்பித்துவரும் பௌத்தமதத்தைப் படித்துப் பரிசிலனைசெய்யலானார்.

இவ்வாறிவர் ஆத்மவாஞ்சையால் எல்லாமதங்களையு மாராய்ந்து ஞானமடையும்படி பௌத்தமதத்தைப் படித்துக்கொண் டிருக்குங்காலத்தில், தகப்பனார் வரவேண்டுமென்று அழைத்ததினால், அவரிடம்வந்து 1804-ம் வருத்தில் தம் தகப்பனார் பரலோகப்பிராப்தி ஆகும் வரை இருந்தார். பின்பு ராமமோஹனராய் சிறிதுகாலம் (East India Company) கிழக்கிந்தியாக் கம்பெனியாரிடம் வேலையில் அமர்ந்து

சிலநாள் கழித்துப்பின் 1814௵ காளிகட்டத்திற்கு(Calcutta)வந்தார். அங்கு பண்டிதோத்தமர் பலருடன் கலந்து, தேசிய பாஷைகளை நன்றாகக் கற்று, வேதசாஸ்திரங்களைத் தேசபாஷைகளில் மொழிபெயர்த்து, மிகவும் பெருமை பெற்று, அவருடன் மதவிஷயங்களைவாதித்து ஆஸ்திகவாதம் செய்துகொண்டிருந்தனர்.

இவருக்கு ஆதியில் ஆங்கிலமென்பது அதிகமாய்த் தெரியாது. பின்பு தம் தகப்பனார் சிரமத்தால் எழுதக் கற்றுக்கொண்டார். எனினும் கம்பெனிவேலையில் சேர்ந்தபொழுது நன்றாகப் பேசக்கற்றுக்கொண்டார். இப்பொழுதே, இவர்பெருமை எங்கும் பிரஸித்தம். இவர் ஸஹகமநத்தைப்பற்றி எழுதிய வினவிடையைக் கொண்டு, ஆங்கிலப் பிரதிநிதியாயிருந்த லார்ட் வில்லியம் பெண்டிங்கி (Lord William Bentink) என்பவர் 1825-ம்௵த்தில் இந்தியாவில் ஸஹகமனத்தைத் தடுத்தார். இவர் குணசாரபாண்டித்ய விவரங்களை அறிந்த மேல்நாட்டாரெல்லாம் இவரோடு நேசங்கொள்ள பேரவாக்கொண்டனர். ஐயர்லாந்து தேசத்தில் மண்ஸ்டர் பாகத்திற்கு அதிபதியான கர்னல் பிட்ஸ்கரன்ஸன் என்பவர் இவருடன் கடித மூலமாக நேசங்கொண்டார். இவருடைய புத்தியும், யுக்தியும், பூர்ணபாண்டித்தியமும் கண்டு மகிழாதவர் ஒருவருமில்லை.

டில்லி பாதுஷாவும் தன் விவகாரங்களைச் சீமையில் லண்டன் நகரத்தில் பார்லிமெண்டு முன் பேசுவதற்கு வகாலத்நாமா கொடுத்து இவரை அனுப்பினார். இக்காரியங்களை செய்யும்பொருட்டு 1831-ம்௵ இவர் சீமைக்குச் சென்று தன் காரியங்களை நிறைவேற்றிக்கொண்டு, இவர் பலபாஷை பாண்டித்தியம் யாவரும் பார்த்து ஆநந்திக்கவும் கௌரவிக்கவும் ஆங்காங்கு சஞ்சரித்துக்கொண்டிருந்தார்.

1833-ம்௵மும் வந்தது. ஐயர்லாந்தில் பிரிஸ்டல் நகரத்தில் பூமிதேவி தன்கர்ப்பத்தில் ராமமோஹனரை அடக்கிக்கொண்டு விட்டாள். இன்னும் தன் தேசத்திலிருந்து 3000 காததூரத்தில் தன்னூர்ப் பெருமை விளக்கிக்கொண்டு, பாண்டித்தியசிகாமணியும், ஆஸ்திகரத்னமுமாகிய ராமமோஹனர் சமாதியின்கீழ் தன் தேசப்பெருமையை விளக்கிக்கொண்டிருக்கிறார்.

## வீடுகளைக்குறித்த சில
## சுகாதார விதிகள்
### DOMESTIC HYGIENE

நாம் வசிக்கும் வீடுகள் பலவிதமாகக் கட்டப்படுகின்றன. அதாவது, அவை கட்டப்படும் வகையும், அவைகளுக்குபயோகிக்கும் சாமான்களும் கட்டுபவர்களின் சக்திக்கும் மனோபாவத்திற்கும் தகுந்தபடி பலவிதமாக வேறுபடுகின்றன. இவ்வித வேறுபாடுகளுக்கிடையில் சில ஒற்றுமைகள் இருக்கவேண்டும். இவ்வொற்றுமைகளுக்குக் காரணம் சரீர ஆரோக்கியத்தைச் சம்பந்தித்த உண்மைகளும், சுகத்திற்கும் சௌகரியத்திற்கும் உரிய ஏற்பாடுகளுமே. உதாரணமாக: நாம் வசிக்கும் அறைகளில் காற்று தாராளமாக சஞ்சரிக்கும்படி வாசல்களும், ஜன்னல்களும் அமைந்திருக்க வேண்டுமென்பது சரீர ஆரோக்கியத்தைச் சம்பந்தித்த விஷயம். காலை சாயங்கால வெயில் உள்நுழைந்து இருப்பதற்கு முடியாத உஷ்ணத்தை யுண்டுபண்ணாதபடியும், அறையின் மேல்தளம் அதின் உஷ்ணம் கொஞ்சமேனும் தலையில் தாக்காதபடி உயரமாயும், அறையிருக்கவேண்டுமென்பது சுகத்துக்குரிய ஏற்பாடு. இவ்விரண்டு விதமான விஷயங்களையும் கவனித்து வீடுகளைக் கட்டுவார்களானால், வீடுகள் மற்றவிஷயங்களில் இழிவாயும் அழகுக்குறைவாயும் இருந்தபோதிலும் வசிப்பவர்களுக்குச்சரீர ஆரோக்கியத்தையும் சுகத்தையுங் கொடுத்து, கட்டுபவர்களுக்கும் லாபகரமாக விருக்கும்.

சரீர ஆரோக்கியத்திற்காக வீடுகளில் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயங்கள். (1) ஈரமின்மை, (2) காற்றோட்டம், (3) சுத்தம்.

வீடுகளில், வசிக்கும் அறைகளும், தூங்கும் அறைகளும் ஈரப்பற்றில்லாமலிருக்கவேண்டும். வியாதிக்குக் காரணமான சகலவித ஜீவ அணுக்களும் (Microbes & Bacteria) தங்கி வளருவதற்கு ஈரம் முக்கியமான காரணம். இவைகள்

தங்கியிருக்கும் பதார்த்தங்களனைத்தையும் நன்ருக உலர்த்திவிட்டால் அவை இறந்து போம். இது நன்ருக ஆராய்ச்சி செய்து தெரிந்துகொண்ட உண்மை. ஆகவே நாம் வசிக்கும் இடங்கள் எவ்வளவுக் கெவ்வளவு ஈரப்பற்றில்லாம லிருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு சரீர ஆரோக்கியத்துக்கும் சாதகமாகவிருக்குமென்பது தெளிவாகிறது. இதற்காக நாம் செய்யவேண்டியது என்ன?

சில அற்பவிஷயங்களைக் கவனித்தால் சகல வியாதிக்கும் காரணமான ஈரத்தை நாம் வசிக்கும் இடத்தில் அணுகவொட்டாமல் செய்யலாம்.

வீடு தரைமட்டத்திற்குமேல் கூடியமட்டிலும் உயர்ந்திருக்க வேண்டியது. பூமியிலுள்ள ஈரத்தை, கழுவும்போதும், மற்றவிதமாகவும் மேல் ஊற்றப்படும் ஜலத்தையும் தான் இழுத்துக் கொள்ளாத சாமானல் வீட்டுத்தளங்கள் அமைந்திருக்கவேண்டும். அதாவது, கடப்பைக்கல், சிமிட்டிச்சுண்ணும்பு, முதலிய சாமான்களால் அமைந்திருக்கவேண்டும். அப்படியே ஸ்நானம்பண்ணும் இடங்களும், கக்கூசுகளும், ஜலதாரைகளும், சிமிட்டிச் சுண்ணும்பினல் பூசப்பட்டு சரியான நீர் வாட்டமுள்ளனவாக இருக்கவேண்டும். பூமியிலுள்ள ஈரம் சுவர் வழியாகக் கசிந்தேறி வீட்டிற்குள் பிரவேசியாமலிருக்க அஸ்திவாரம்முதல் வீட்டுத்தளம் வரையிலாவது சுவர்கள் செங்கல்லும் சுண்ணும்புமாகக் கட்டப்பட்டு, தளத்திற்கும் தரைமட்டத்திற்கும் நடுவில் கடப்பைக்கல் முதலிய ஈரத்தை இழுத்து வெளிவிடாத சாமான்களால் ஒருவரிசை வைத்து அமைக்கப்பட்டிருக்கவேண்டும். கடைசியில் சொன்ன விஷயந்தவிர மற்றவைகள் எல்லோருக்கும் தெரிந்த விஷயங்களே. ஆனல் லோபித்தனத்தினும், அசிரத்தையினும் எத்தனை வீட்டுக்காரர்கள் இவ்வற்ப விஷயங்களைக் கவனிக்கிறதில்லையென்பதை குடிக்கூலிக்காக வீடு தேடுபவர்கள் அநுபவத்தில் தெரிந்திருப்பார்கள். வீடு ஈரமில்லாமலிருப்பதுடன் காற்ருேட்டமுள்ளதாயிருக்கவேண்டும். நாம் சுவாசம் விடும் கரியமல வாயுவையும் மற்ற விஷபதார்த்தங்களையும் வெளியே விடுவதற்கும், சுத்தமான காற்று உள்ளே வருவதற்கும் சரியான வசதியுடன் வசிக்கும் அறைகள் இருக்கவேண்டும். இத்தேசத்தில் சரியான ஜன்னல்களாலேயே இக்காரியம் சித்திக்கவேண்டியதாயிருக்கிறது. ஜன்னல்கள் சரியான நீளமும் அகலமுமுள்ளனவாயும், அறையின் தளத்திற்கு அதிக உயரத்தில் இல்லாமலும், எதிர்க்கெதிராய் ஜோடியாக அமைக்கப்பட்டனவாயும் இருக்கவேண்டும். அறை அதிக உயரமாயிருக்கும்பக்ஷத்தில் மேல்தளத்திற்குச் சமீபத்தில் அசுத்தமான காற்றுத் தங்காதபடி சிறிய ஜன்னல்கள் மேல்தளத்திற்கு அருகில் எதிர்க்கெதிராய் வைத்திருக்கவேண்டும்.

வசிக்கும் அறைகள் சரியான காற்ருேட்டமுள்ளனவாயிருப்பதோடு, வசிக்கும் ஜனங்களின் தொகைக்குத் தகுந்தபடி விஸ்தீர்ணத்துடனு மிருக்கவேண்டும். தூங்கும் அறைகளில் ஒரு ஆளுக்கு 100 சதுர அடி வீதம் இடம் வேண்டியது. அதாவது $15\frac{1}{2}$ அடி நீளமும் $12\frac{1}{2}$ அடி அகலமும் உள்ள ஒரு அறையில் இரண்டுபேர்களுக் கதிகம் நித்திரைசெய்வது உத்தமமன்று. இந்த அறைக்குள் இருபக்கத்தில் 8 அடி உயரமும் 4 அடி அகலமுமுள்ள ஒரு கதவும், 5 அடி உயரம், 3 அடி அகலமுள்ள ஒரு ஜன்னலும், அதற்கு எதிர்ப்பக்கத்தில் கதவுக்கும் ஜன்னலுக்கும் நேராக மேற்சொன்ன ஜன்னலளவிற்கு இரண்டு ஜன்னல்களும் அமைந்திருக்கும் அறையே உத்தமமானது. சேர்ந்திருக்கும் இரண்டு பக்கங்களில் மாத்திரம் ஜன்னலிருந்தால் அவ்வறை மத்திமம். ஒருபக்கத்தில் மாத்திரம் ஜன்னலிருந்தால் அவ்வறை அதமம். ஜன்னல்களில்லாத அறையில் சாமான்கள் போட்டிருந்தால்கூட கெட்டுப்போய்விடும்.

வீடுகளும் வீட்டைச் சுற்றுமுள்ள இடங்களும் சுத்தமாயிருக்கவேண்டும். இது முக்கியமாக வசிப்பவர் கவனிக்கத்தக்கதே யொழிய

வீடுகட்டுபவர்க்கு இதுவிஷயத்தில் என்னபொறுப்பென்று சிலர் சந்தேகிக்கலாம். பெரிய பட்டணங்களில் வீட்டுக் குப்பை முதலிய அழுக்கு சாமான்களை வாரிக்கொண்டுபோக, நகர்ச் சுத்திசெய்யும் உத்தியோகஸ்தர்களும், அழுக்கு ஜலத்தை அடித்துக்கொண்டுபோக சாக்கடைகளும், சாக்கடைகளைச் சுத்திசெய்ய வேலைக்காரர்களும் ஏற்பட்டிருக்கிறார்கள். வீட்டில் வசிப்பவர்களுக்கு வீட்டை அடிக்கடி பெருக்கிக் கழுவி, உபயோகமில்லாத சாமான்களையும் குப்பையையும் வாசலில் கொண்டுபோய் குப்பை தள்ளும் தகரங்களில் கொட்டுவது தான் செய்ய வேண்டிய வேலை. ஆனால் சிறிய பட்டணங்களிலும், கிராமங்களிலும், பெரிய பட்டணங்களில் உள்ள சில பங்களாக்களிலும் இவ்வித சௌகரியங்கள் இல்லை. வாசலிலும், புறங்கடையிலும் வீட்டில் உண்டாகும் குப்பைகளும் மற்றும் குப்பல் குப்பலாகக் குவிந்திருப்பதையும், வீட்டு ஜலதாரை போவதற்கு வழியில்லாமல் முற்றத்திலும், வாசலிலும், புறங்கடையிலும் தங்கி, வீட்டிலும் பக்கத்திலுமுள்ள நல்ல காற்றையெல்லாம் தன் துர்க்கந்தத்தால் கெடுத்து ஈ, கொசுகு, பூச்சி, புழு முதலியன நிரம்பி வியாதிகள் தங்கிவளர்ந்து பரவுவதற்கு ஆஸ்பதமான வற்றாத குட்டைகளாவதை நாம் அநேக வீடுகளில் பார்த்திருக்கலாம்.

இவ்வித அசுத்தத்தை நிவிர்த்திசெய்ய சில சுலபமான வழிகள் இருக்கின்றன. குப்பைகளை வாசலிலோ புறங்கடையிலோ கொட்டி, அவை காற்றினால் இறைக்கப்பட்டு அசங்கியம் பண்ணுவதற்குப்பதில், அவற்றைச் சுவரினால் கட்டப்பட்ட தொட்டிகளில் சேகரித்துவைத்து அடிக்கடி கழனிகளுக்கப்புறப்படுத்தலாம். அத்தொட்டிகளுக்குமேல் மரச்சட்டங்களால் செய்த ஒரு கதவும் பக்கத்தில் பலகையினால் ஒரு கதவும் இருந்தால் கொட்டுவதற்கும் எடுப்பதற்கும் சௌகரியமாயிருக்கும்.

வீடு கட்டும்பொழுது, ஒரு சிறிய தோட்டம் போடுவதற்கு இடம்விட்டு வைக்கவேண்டும். வீட்டில் உண்டாகும் அழுக்கு ஜலமெல்லாம் அந்தத்தோட்டத்திற்குப் பாயும்படி ஏற்பாடு செய்யவேண்டும். அந்தத்தோட்டத்தில் வீட்டுக்குவேண்டிய காய்கறிகளும், புஷ்பங்களும் பயிர் பண்ணலாம். இப்படிச் செய்வதனால் வீட்டுச்சாக்கடை வியாதிக்குக் காரணமாயிருப்பதை விட்டு கண்ணுக்கினிமையான பல புஷ்ப பத்திராதிகளை விர்த்திசெய்யக் காரணமாகிறது.




மேற்சொல்லிய விஷயங்களெல்லாம் சரீர ஆரோக்கியத்துக்கு அநுகூலமானவை. இவற்றைக் கவனியாமற்கட்டிய வீடுகளில் வசிப்பதனால் வியாதிக்கு இடமுண்டாகிறது. “ஆனால், இப்பொழுது இவ்வித ஏற்பாடுகளை அமைத்துக் கட்டிய வீடுகள் மிக்க் குறைவாயிருக்கின்றன; அப்படி இவ்வேற்பாடுகளில்லாத வீடுகளில் வசிக்கும் ஜனங்களெல்லாரும் வியாதிஸ்தர்களாகத் தானிருக்கிறார்களோ” என்று சிலர் கேட்பார்கள். சுகாதார விதிகளுக்கு விரோதமாகக் கட்டப்பட்ட வீடுகளில் வசித்தும் ஆரோக்கியக் குறைவில்லாமல் இருப்பவர்கள் சுகாதார விதிகளுக்கிணங்கியிருக்கும் வீடுகளில் வசித்தால் இன்னும் அதிக ஆரோக்கியமும் பலமுமுள்ளவர்களாயிருப்பார்களென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. அப்படிப்பட்ட வீடுகளில் வசிப்பதனால் வியாதி மரணம் இவ்விரண்டும் குறையுமென்பதற்குத் தடையுமுண்டோ?

மற்றப்படி சுகத்திற்குக் காரணமாக அமைக்கவேண்டிய ஏற்பாடுகளைப்பற்றி இங்கே விரித்துச் சொல்லவேண்டியதில்லை. வீட்டின் முக்கிய அறைகள் தெற்கைப் பார்த்திருந்தால் வேனிலில் தென்றல்வருதற்கு இடம் கொடுத்து, கார்காலத்தில் வாடைக்காற்று வராமலிருப்பதற்கு காரணமாயிருக்குமென்பதும், அறைகளில் கிழக்குப் பக்கத்திலும், மேற்குப் பக்கத்திலும் தாழ்வாரங்கள் இருந்தால் காலை சாயந்திர வெயில் அறைக்குள் நுழைந்து தொந்திரவு பண்ணாமலிருக்குமென்பதும், வீட்டு மேல் தளமோ கூரையோ நன்றாக உயர்ந்திருந்தால் வெயிற்காலத்தில் மேல் தளத்தின் உஷ்ணம் தாக்காதென்பதும், இன்னும் சௌக்கியத்துக்குச் சாதகமான அநேக உண்மைகளையும் அவரவர்கள் அநுபவத்திலேயே தெரிந்துகொண்டிருப்பார்கள்.

நே. நாராயணய்யர், M.B., & C.M.

# இயற்கை அற்புதங்கள்

## WONDERS IN NATURE



### I. மழைக்கால்கள். WATER SPOUTS

ஸமுத்திரங்களில் சிற்சிலஸமயங்களில் சுழல் காற்று அடிக்குங்காலத்தில் மேகத்தைப் போன்றத் தோற்றத்தை உடையதாய் ஸமுத்திரம் முதல் மேகங்கள் வரையில் ஓர் தூண்போல் ஸமுத்திர நீர் காணப்படுவது வழக்கம். இதற்கு மழைக்கால் என்று பெயர். ஸமுத்திரத்தருகில் இருக்கும் இந்த நீர்த்தூணின் அடிபாகம் குறுகலாயும், மேகத்தருகில் இருக்கும்மேல் பாகம் அகலமாயும்இருக்கும். ஆகவே இதுபார்வைக்கு ஒருபெரிய பெய்குழல்(funnel)போலக் காணப்படும். இந்தத் தூண் ஸ்திரமாயிருப்பதல்ல. இதில் ஜலம் ஸதா சுற்றி மேல்நோக்கி ஏறிக்கொண்டும், மழைக்கால் முழுவதும் இடம் பெயர்ந்து ஓடிக்கொண்டும் இருக்கும். இது சிற்சில ஸமயங்களில் அதி வேகமாகக் கடலில் ஓடியாடி வருவதை அனேக மாலுமிகள் கண்டிருக்கிறார்கள். இதன் அடிபாகத்தில் ஸமுத்திரஜலம் கொஞ்சம் உயர்ந்தும் கொந்தளிப்பால் கொதிப்பது போலவும் காணப்படும். இவ்வாறு தம்முள் சுற்றிக்கொண்டு இடம் விட்டோடும் மழைக்கால்கள் சிற்சில ஸமயங்களில் நேராக மேல்நோக்கியும் சிற்சில ஸமயங்களில் ஓர் பக்கம் சாய்ந்து திரிந்தும் காணப்படும். இருவித மழைக்கால்களை சித்திரத்தில் காண்க. இவ்வாறு சுற்றும் பெய்குழலின்வழியாக சிற்சில ஸமயங்களில் ஏராளமாக ஸமுத்திரத் தண்ணீரும் மேகத்தை நோக்கி இழுக்கப்பட்டு சுழல்காற்றில் அகப்பட்ட சரக்குகள் உயரத் தூக்கப்பட்டு கீழே இறைந்து விழுவது போல் மேலிருந்து கீழே சிதறிவிழுவது வழக்கம்.

இவ்வற்புதத் தோற்றம் கடலில் உண்டாவதற்குக் காரணம் என்னை என்று அறிய இதை வாசிப்பவர்களுக்கு விருப்பம் இருக்கலாம். இம்மழைக்கால்கள் ஸமுத்திரத்தில் மேகஸஞ்சாரம் அதிகமாக இருந்து சுழல்காற்று அடிக்கும் ஸமயத்தில் உண்டாகும். இதனால், சுழல் காற்றினால்தான் இது உண்டாகவேண்டும் என்று ஒருவாறு விளங்கலாம். சுழல்காற்று பூமியில் புழுதி சரகு மணல்முதலிய அற்பபதார்த்தங்களை சுத்தும்படி செய்வதுபோலச் சுழல் காற்றால் வாயு சுழலத்தொடங்கி அடியிலுள்ள தண்ணீரைச் சுற்றும்படி செய்கின்றது. காற்றின்வேகம் அதிகமாக, தண்ணீரும் வேகமாகச் சுற்றப்பட்டு மெதுவாக மேலே கிளம்பிச்

சென்று அருகாமையில் இருக்கும் மேகத்தைத்தொட்டு தண்ணீர்மயமாக இருக்கும் அதனோடு சேர்ந்து வாய் அகன்று நிற்கின்றது. சுழல்காற்றின் *வேகத்தினால்தான் மழைக்காலின் அடிபாகமாகிய ஸமுத்திரத்தில் கொந்தளிப்பும் கொக்கரிப்பும் காணப்படுகின்றது. காற்றின் வேகத்தால் இது ஓடுகின்றது. வாயுவின் சுழல் அடங்கியதும் ஆகாயத்தில் கிளம்பிய தண்ணீரும் மெதுவாக கடலில் விழுந்துவிடுகின்றது.

இதுகாறும் ஸாதாரணமாக எல்லோரும் வேறு காரணம் கூறிவந்தனர். ஆகாயத்திலிருக்கும் மேகம் ஸமுத்திரத்தருகில் இதற்கு கீழே பெய்குழலைப்போல இறங்கி ஸமுத்திர ஜலத்தைத்தொட்டு அதன் மூலமாக அதை மேலே இழுக்கின்றதாம். இந்த எண்ணத்திற்கேற்ப ஜனங்களுள் மேகம் ஸமுத்திரத்தில் தண்ணீர் குடிக்கின்றது என்ற நம்பிக்கை ஒன்று காணப்படுகின்றது. இது உண்மையான காரணம் அல்ல என்பது இக்காலத்திய மாலுமிகளும் பிரகிருதி தத்வசாஸ்திரிகளும் ஸ்தாபித்திருக்கின்றனர்.

மழைக்கால்கள் காற்றின் வேகத்தால் உண்டாகிக் குமிழியைப் போன்றனவாயிருப்பதால் பெரிய மரக்கலங்களுக்கு அபாயம் விளைவிக்கா. ஆனால் சிறிய தோணிகளாவது மனிதர்களாவது இவை கீழே இறங்கும்போது அருகாமையிலிருந்தால் கொஞ்சம் தீங்கு விளைந்தாலும் விளையும். தோணி ஒருவேளை கவிழ்ந்துவிடலாம்; மனிதருக்கு நல்ல அடிபட்டாலும் படும். இவ்வளவு தான். ஒருக்கால் இம்மழைக்கால்களில் உள்ள நீர் உப்புநீரா அல்லது நல்ல நீரா என்று அறிய ஒரு மாலுமி இவைகளின் அருகில் தோணியில் ஏறிக்கொண்டு போனானாம். அவன் போய்ச் சேருவதும் மழைக்கால் கீழே விழத்தொடங்குவதும் ஸரியாக இருக்க அவன் அவைகளால் அடிபட்டு மூர்ச்சைபோனான். உடனே வேறொரு தோணி ஸஹாயத்திற்கு வந்து அவனைத் தப்புவித்தது.

1895-ம் வருஷம் டிசம்பர் மாதம் அடித்த புயற்காற்றில் சென்னை ஸமுத்திரத்தின் தென்பாகத்தில் ஒரு மழைக்கால் தோன்றியதாம். அது காற்றால் வடக்குநோக்கித் தள்ளப்பட்டு வந்துகொண்டிருந்ததாம். இதைக் கண்டு இராஜதானி கலாசாலையில் பிரகிருதி சாஸ்திரம் வாசிக்கும் பிள்ளைகள் தமது உபாத்தியாயரை அழைத்து வந்து காட்ட அவர் அதன் காரணம் முதலியவைகளை விசிதமாக எடுத்துரைத்தனராம். இவர் உபந்யாஸம் முடியும் வரையில் அந்த மழைக்கால் இவர்களை நோக்கி வந்து பின்பு காற்றால் தள்ளப்பட்டு பக்கிங்ஹாம் வாய்க்காலுள் புகுந்து அங்கிருந்ததொருபடகண்டை வொருங்கால் கீழே விழுந்து அதைக் கவிழ்த்துவிட்டதாம். இது அக்காலத்தில் எல்லோரும் பேசிக் கொண்டிருந்த ஸமாசாரம். இதில் எவ்வளவு உண்மை இருக்குமென்பதை நிர்ணயம் செய்யமுடியாது.

அ. சீ. ந.

*காற்று:—சிற்சில ஸமயங்களில் காற்றடிக்காது வாயு ஸ்தப்தமாக இருக்கின்றது. அப்பொழுது இந்தக் காற்றின் பலம் இவ்வளவு என்பது நமக்கு விளங்காது. இது தான் சலிக்குங்கால் பெரிய மரங்களை வேரோடு கல்லி எறிந்து விடுகின்றது என்பதை ஒருவராலும் நம்பமுடியாது. ஆனால் அம்மாதிரி காரியங்களை இந்த வாயு செய்வதை நாம் கண்டிருக்கிறோம். இம்மாதிரி செய்யும் திறம் அது சலிக்கும்போது வருகின்றது. சலிக்கும் வாயுவே காற்று என்று பெயரிட்டழைக்கப்படுகிறது. ஒரு ஸமயத்தில் வாயு சலிப்பானேன்? மற்ற ஸமயங்களில் ஸ்தப்தமாக இருப்பானேன்? வேறு சில ஸமயங்களில் வெகு வேகமாக அடிக்கும் சுழல்காற்றாகமாறுவானேன்? வாயுவானது எல்லாவிடங்களிலும் நம்மைச் சுற்றிக்கொண்டிருக்கும் ஓடும் திறமையுடைய ஒரு பதார்த்தம். அது எல்லா இடங்களிலும் தனது கனத்தால் அமுக்கிக்கொண்டே இருக்கிறது. நமக்கு அதன் கனத்தை அறியாததற்குக் காரணம் நாம் அதனோடேயே இருந்து வெகுகாலம் பழகிவிட்டதே. இதைப்பார்க்கவேண்டுமாகில் வாயை ஒரு பஞ்சபாத்திரத்தால் மூடிக்கொண்டு அதனுள் இருக்கும் வாயுவை நாம் வாயால் உருஞ்சிவிட்டால் அந்தப்பாத்திரம் நமது வாயோடு கெட்டியாக ஒட்டிக்கொள்ளும். அதை எடுக்கவே முடியாது, பழையபடியும் காற்றைவாயால் பாத்திரத்துள் விட்டால் அதை லகுவாக எடுக்கலாம். நன்றாக உருஞ்சிவிட்டு பாத்திரத்தை பலாத்காரமாக எடுத்தால் ஒருவேளை அது வாயின் சதையைக் கூட இழுத்துக்கொண்டு வந்துவிடும். ஆகவே வாயுவிற்கு அமுக்கும் சக்தி இருக்கிறது என்பது இதனால் விளங்கும். அது நம்மை எல்லாப் பக்கங்களிலும் அமுக்குவதாலும் நமக்கு அதன் ரூபம் தெரியவில்லை. இந்த அமுக்கும் வேகம் சீதோஷ்ண ஸ்திதியால் எங்கேயாவது குறைந்தால் மற்றையிடங்களிலிருந்து ஓடும் தன்மையை உடைய வாயு தன்விட்டாற்போல் அவ்விடம் நோக்கி ஓடிவர, வாயுவில் சலனம் ஏற்பட்டு காற்று அடிக்கத் தொடங்குகிறது. அமுக்கும் சக்தி ஓர் இடத்தில் அதிகமாகக் குறைந்துவிட்டால் அருகாமையில் உள்ள வாயு ஓடிவரும் அதிவேகத்தால் சுழன்றுவர சுழல்காற்று உண்டாகின்றது. இந்த அமுக்கும் சக்தியினது ஏற்றத் தாழ்வே வாயு சலனமாகிய காற்றிற்குக் காரணம்

# சமயபுரத்தின் மகாத்மியம்

## NOTABILITY OF SAMAYAPURAM

---

சிறப்பும் செல்வமும்வாய்ந்த நமது தேசத்திலே எத்தனையோ விடங்களில் ஆதிகுருவான சிவபிரான் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் நேர்மையையும், ஒவ்வோரிடத்திற்கும் போய்ப் பரமபொருளிடம் பரிபூரணமாய்ப் பக்திவைத்திருக்கக் கூடிய அடியார்களான சிவனடித்தொண்டர்கள் சித்தமுத்த சுத்தனும் அவ்வம்பலவாணனை அடிபணிந்து தொழும் விமர்சையையும், யாத்திரிகர் பலர் கூறக்கேட்டுத் பரமானந்த மடைந்திருக்கிறோம். புராதன மகிமைகொண்ட சிவஸ்தலங்கள்மட்டுமேயல்ல, பேர்போன விஷ்ணுஸ்தலங்களும் நிரம்பியுள்ள நமதுநாட்டில் விஷ்ணுபக்திசெய்யும் ஆழ்வாராதியரால் பாடப்பெற்ற எண்ணிறந்த விடங்களுமுண்டு. பாடல்பெற்று, பக்தகோடிகளால் தரிசனஞ்செய்யப்பெற்று, பண்டைக்கால வாராய்ச்சிக்குப்போதிய உறைவிடங்களாய் மதிக்கப் பெற்று, மகநீயமாய் மானிடர் கண்களுக்குப் புலப்படும் மகாமகாஸ்தானங்களை இச்சிறு வியாஸத்தில் எழுதி முடியாது. எனினும், நம்மாற் கூடுமானவரையில் சிவன், விஷ்ணு என்னும் பேதமெதுவுமில்லாமல் ஏகோமயஸ்வரூபியாய், நம்பினோரை நளினமாய் ஆதரிக்கும் தன்மையளாய், தொழுது ஸ்தோத்திரஞ் செய்ய வரும் தன்யர்களது பாபகர்மங்களைத் தரணியில் தொலைத்துத் தீவிரமாய் அவர்களுக்கு மனவில் ஆனந்த மூட்டுவளாய், மற்றெங்கும் பிரகாசிக்கும் பராசக்தி ரூபியாய் தேவி ஆங்காங்கு கொலுவிருப்பதையும், சிவனார் வேடரூபியாயும் பிட்டுக்கு மண்சுமந்தும், சித்ஸபையில் ஆனந்தத்தாண்டவமாடியும் பின்னுமெத்தனையோவிடங்களில் பக்தர்களுக்குத் தொண்டு புரிந்திருப்பதையும், மஹா விஷ்ணுவானவர் அலங்காரப்பிரியம் வைத்த சிங்கார சிகாமணியாய்த் தம்மை அண்டிவரும் ஆன்மகோடிகளை அடிவயற்றில் வைத்துக் காப்பாற்றும் ஆபத்பாந்தவனாய், ஆலிலைமேற் பள்ளிகொண்ட அநாதைரக்ஷகனாய், அபலையான பாஞ்சாலிக்குத் துரியோதனாதியர் சபையில் மானமழியவிருந்தகாலத்து அம் மானஸம்ரக்ஷணர்த்தம் அவளது ஹிருதயகமலத்தில் அவதரித்த புண்ணியராய்ப் பிரகாசித்திருப்பதையும் பார்க்கப்புகின் பெரும்பாரதமாய் எழுதிவிடுக்க முடியும். ஸர்வலோக சரண்யனும் ஸர்வாந்தர்யாமியுமான ஆதியந்த மில்லாத அப்பராபரவஸ்துவே மேற்சொன்னவாறு தரணியில் தாண்டவமாடுகிறதென்பது ஆசிரமவாஸிகளாயிருக்கும் ஆத்மாநந்தர்களின் துணிபு. ஆகவே அப்பரமபதியின் பிரபாவத்தைப் பரிசீலனை செய்யவோ, பக்தர்களுக்கு உரைக்கவோ, உரைத்து அவர்களது மனஸைப் புளகிதமாக்கவோ, நவத்துவாரங்களோடுகூடின பொய்ச்சடலமுடைய புழுக்கூடெனத்தகும் மானிடவுருக்கொண்டோரால் இயலாது. அங்ஙனமிருந்த போதிலும் பூதவுடலைதரித்து நிற்கும் புவியிலுள்ளார்க்கு இவ்விடத்து ஸ்வாமிக்கு நல்ல சக்தியுண்டென்றும், அவ்விடத்து ஸ்வாமிக்குக் கைகொண்ட பலனென்றும், மற்றோரிடத்துத் தேவருக்கு மகாவீரமென்றும், வெண்காட்டம்மனுக்குப் பராக்கிரமம் அதிகமென்றும் பிதற்றுவது இயல்பு. இத்தியாதி பேதங்களைக் காட்டுவதில் பிரயோசனமொன்றுமில்லை. ஆதலின் ஆங்காங்கிருக்கும் தெய்வங்களைப் பேதாபேதமின்றிப் பார்த்து பஜிப்பதே (மநநம்பண்ணுவதே) பாரததேவியின் புதல்வராய்ப் பிறந்த பக்தகோடிகளுக்கழகு. இவ்வாறாகப் பார்த்துப் பரவசமடையவேண்டிய ஸ்தலங்களில் சமயபுரமும் ஒன்று.

அந்தச் சமயபுரம் திருச்சி ஜில்லாவில் இருக்கும் ஒரு ஸ்தலமாகும். அது ரெயில்வே வசதியில்லாததொரு சிறிய குக்குகிராமமென்று பலர் நினைத்த போதிலும் செவ்வாய்க் கிழமை யன்றும் ஞாயிற்றுக் கிழமை யன்றும் அவ்விடத்திற் கூடும் ஜனப்பெருக்கத்திற்கு அளவில்லாமல் இருக்கிறது. இது திருசிராப்பள்ளி ஜில்லாவில் திருச்சி டவுனுக்கு வடக்காக 8 மைல் தூரத்தில் சென்னைக்குவரும் பெரிய ரஸ்தாவில் நிற்கும் ஒரு கிராமம். இந்தச் சமயபுரத்துக்குத் தெற்கில் 2026 ஜனத்தொகையுடன் கண்ணனூர் என்கிற கிராமமும் இருக்கின்றது. அதற்கும் சமயபுரமென்றேபெயர் வழங்கிவருகின்றது. அவ்விடத்துக்குக் கண்ணனூர் எனப் பெயர் வந்த காரணம் என்னவெனில் அவ்விடத்துத் தொன்மையாராய்ச்சியை அநுஸரித்த சிலாலேகங்களால் (Archaeological Inscriptions) தான். ஸ்ரீரங்கக்ஷேத்திரத்திற்கு வடக்காய் ஐந்துமைல் தூரத்தில் விக்ரமபுரம் என்று சொல்லப்பட்டுவந்த கிராமமே இப்போது சமயபுரமென்று பெயர்கொண்டு நிற்கின்றது. இந்தக் கிராமத்தில் கால் மைல் தூரத்திற்குள்ளாக இரண்டு கோவில்களிருக்கின்றன. ஒன்றுக்கு போஜேசுவரஸ்வாமி கோவிலென்றும்

---

* Orme's History of Hindustan.

மற்றொன்றுக்கு மாரியம்மன் கோவிலென்றும் பெயர். 1752-வது வருஷத்தில் பிரான்சிய சைந்நியமானது படையெடுத்து வந்தபோது ஐரோப்பியர்களும் சிபாய்களும் மேலேசொன்ன இருகட்டிடங்களுக்குள்ளே யிருந்தார்கள்; மாராட்டியரும் தஞ்சாவூர்த்துருப்புகளும் வெளியிற் கூடாரமடித்துத் தங்கியிருந்தனர். சரித்திர சம்பந்தமான இவையனைத்தையும் ஆர்மி என்னும் ஆங்கில நிபுணர் தமது புத்தகத்தில் விரிவாய் எழுதியுள்ளார். ஹாய்சாலவம்சத்தைச் சேர்ந்த வெள்ளாழ அரசனொருவன் இந்த போஜேசுவர சுவாமி கோயிலைக்கட்டுவித்தான் என்றும், 13-ம் நூற்றாண்டில் ஹாய்சாலராஜ தலைஸ்தானமாயிருந்தது விக்ரமபுரமென்பதாகக் கண்ணனூரே காட்டப்பட்டதென்றும் கூறப்படுகின்றது. திருவானைக்காவெனும் ஜம்புகேசுவரம் கோவிலில் இருக்கப்பட்டதொரு சிலாலேகத்தைப் பார்க்கும்போது அதனில் வீரஸோமேசுவர அரசன் சொன்னதாகக்குறிப்பிடுவ தென்னவென்றால் 'கண்ணனூர் என்கிற விக்ரமபுரத்தில் நாங்கள் வைத்துத் தொழும் பாய்சாலீசுவரரது விக்ரஹம்' என்று காணப்படுகிறது. கண்ணனூர் கோவிலின் தென்பாகத்துச் சுவரிலிருக்கும் ஹாய்சால வம்சத்தரசனான வீரராமநாத தேவர் எழுதிவைத்த சிலாலேகத்தினால் ஹாய்சாலவரசனது ஈசுவரர் கோவில் என்றுந் தெரிகிறது. மேலும் மைசூர் அரசர் கி. பி. 1253-வது வருஷத்தில் விக்ரமபுரத்தில் வீற்றிருக்குங்கால் வீரஸோமேசுவரரைப்பற்றிப் பதிப்பித்ததொரு செம்புச்சிலாலேகமானது இன்றும் பெங்களூர் மியூஸியத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது. அக்காலத்திருந்தே மாரியம்மன்கோவிலும் வெகுவாய்ப் பிரகாசித்து வந்ததற்கிணங்க நாளுக்குநாள் அது மிக்க மேன்மைபெற்று ராஜதானியின் நாற்புறத்தினின்றும் அளவற்றயாத்திரிகர்களும் பிரார்த்தனைகர்த்தர்களும்இந்த மாரியம்மன் கோவிலுக்கு வந்துகொண்டேயிருக்கிறார்கள். பராசக்தி அக்கோயிலின்கண் ஆவாகனம் ஆயிருப்பதாகவே ஐதிகம். அந்த அம்மன் கோயிலில் பூஜைசெய்வோர் அந்தணரேயன்றி சூத்திரால்லர்; சாதாரணமாக மாரியம்மன்கோயில்களில் பூசாரிகளிருப்பர்; அவர்களே மூலவிக்கிரகத்திற்கும் உற்சவவிக்ரஹங்களுக்கும் பூஜை செய்வது வழக்கம்; ஆனால் இச்சமயபுரம் கோவிலில் அவ்வாறில்லாது அந்தணரே பூஜைசெய்ய அமர்த்தப்பட்டிருக்கின்றனர். அக்கோயில் ஸ்ரீரங்கம் ரங்கநாதஸ்வாமிகோவில் டிரஸ்டிகளின் ஆதீனத்திற்கு உட்பட்டதாகும். எத்தனையோவியாதியஸ்தர் தம்வியாதிகளைத்தீர்க்கும்படி அம்மன்கோயிலுக்கு வந்து பிராகாரத்தில் அங்கப்பிரதக்ஷிணம் செய்வதும், அடிப்பிரதக்ஷிணஞ் செய்வதும், மற்றும் மண்டலப் பிரதக்ஷிணஞ் செய்வதுமாயிருக்கிறார்கள். அந்தக் கோவிலுக்குள் கூன்விழுந்த பேரும், குருடானபேரும், பிள்ளையில்லாத மலடிகளும், மற்றும் தம் காரியஸித்தி பெறவேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டோரும், தொலைதூரத்தினின்றும் வந்து சமயபுரத்திலுள்ள தர்மசத்திரங்களில் தங்கிப் பிரார்த்தனைகளைச் செலுத்திப்போவதுண்டு. வெளியூரிலிருந்து எவர் வந்தபோதிலும் அவர்களுக்குத் தகுந்தபடி அநுகூலங்கள் செய்துகொள்ள இடமிருக்கின்றது. கடவுள் இல்லையென்று சொல்லும் நாஸ்திகரும் அக்கோயிலுக்குள் சென்று அம்மன் முன்னிலையில் நிற்கும்போது தேகம் பரவசமாய் விடுவது நிச்சயமென்பதைப் பலரும் அறியும்படி அந்த நாஸ்திகர்கள் சராமாரியாக ஸ்தோத்திரஞ்செய்வதும் கைகூப்பிநின்று நெற்றியில் விபூதிவாங்கி யிடுவதும், தீபாராதனை காலங்களில் தலைவணங்கித் தம் இருகரங்களாலும் கன்னத்தில் போட்டுக்கொள்வதும் செப்பத்தரமன்று. அந்தக் கோவிலுக்குச் சைவர்களானாலும் வைஷ்ணவர்களானாலும் பேதாபேதமின்றி வந்து பலனடைந்து செல்லுகிறார்கள். இவ்வம்மனைத் தொழுவதனால் உண்டாகும் பலன் என்னவென்று பார்க்கும்போது திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் சிதம்பரம் இராமலிங்கசுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய 'திருவருட்பா' விலுள்ள தோத்திரமுறைப்பாடலொன்றும் எம் ஞாபகத்துக்கு வருகின்றது. 'அருள்விளக்கமாலை'யின் ஸம்பந்தமாக அவர் கூறுவதென்ன வென்றால்:—

கல்லார்க்குங் கற்றவர்க்குங்
களிப்பருளுங் களிப்பே—
காணார்க்குங் கண்டவர்க்குங்
கண்ணளிக்குங் கண்ணே;
வல்லார்க்கு மாட்டார்க்கும்
வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும்
மதிகொடுக்கு மதியே;
நல்லார்க்கும் பொல்லார்க்கும்
நடுநின்ற நடுவே
நரர்களுக்குஞ் சுரர்களுக்கும்
நலங்கொடுக்கும் நலமே,
எல்லார்க்கும் பொதுவில் நட
மிடுகின்ற சிவமே
என்னரசே யான் புகலு
மிசையு மணிந்தருளே.

ல. அனந்தய்யர்.

# குமார ஸம்பவம்

## BIRTH OF KUMARA

பண்டித நடேசசாஸ்திரியாரால் மொழிபெயர்ப்பு

### சிவபெருமான் தவம்புரிதல்

53. முன் ஜன்மத்தில் தாக்ஷாயணியானவள் தான் தக்ஷப்பிரஜாபதியினிடம் அடைந்த கோபத்தால் தனது தேகத்தை என்றையத்தினம் அக்கினியில் விட்டாளோ அன்று முதல் சிவபெருமானும் விஷயத்தில் ஆசை ஒழிந்தவராய் மனைவியில்லாதவராகவே யிருந்தார்.

54. அன்றியுமவர் மான்தோல் தரித்து ஐம்புலன்களையும் அடக்கி தவம் செய்யக் கருதி கங்கை அருவிகளின் சலத்திவலைகளால் நனைந்து நிற்கும் தேவதாரு விருக்ஷங்கள் நிரம்பியதாய் கஸ்தூரி மிருகத்தின் பரிமளம் வீசுவதாய் கின்னரர்கள் கானம் பண்ணிகொண்டிருப்பதாய் விளங்கும் இமாலயத்தின் ஓர் தாழ்வரையை அடைந்தார்.

55. அவருடைய பிரமதகணங்கள் தேவ புன்னை மலர்களைத் தங்கள் தலைகளிலணிந்து மிருதுவான மர உரிகளைத் தரித்துக் கொண்டு காவிப் பொடிகளை தங்கள் மேனியின்மேல் பூசிக்கொண்டு வாஸிக்கும் மூலிகைகள்நிரம்பிய மலைச்சார்புகளில் தங்கலானார்கள்.

56. சிவபெருமானுடைய இடபமும் கல்போல் உறைந்திருந்த பனிக்கட்டிகளைத் தனதுகால் குளம்பால் கீறிவிட்டுக்கொண்டு மதத்தால் மனோகரமாய் முக்காரம் போட்டுக்கொண்டு அக்காட்டில் சஞ்சரிக்கலாயிற்று. அவ்விடபத்தைக் கவயம் என்ற மிருகம் எப்பொழுதாவது பயந்து பார்த்தபொழுது அப்பார்வையை சகிக்கமுடியாமல் அவ்விடம் சிங்க கர்ஜனைக்கு ஒப்பாய் கர்ஜிக்கும்.

57. அவ்விடத்தில் சிவபெருமான் தனது எண்வகை மூர்த்தியில் ஒன்றாகிய அக்கினியை மூட்டி அதைச் சமித்துகளால் வளர்த்து அதன் முன் உட்கார்ந்துகொண்டு தவத்தின் பயனைத்தானே மற்றவர்களுக்கு அளிக்கும் மகிமைபடைத்த மகாதேவர் ஏதோ காரணத்தால் தானே தவம்புரியலானார்.

58. இமவான் பரமசிவத்துக்குச்செய்த பூஜை:— மலைகளின் மன்னவனாகிய ஹிமவானும் ஒப்பற்ற மகிமை பொருந்தியவராய்த் தேவர்களால் வணங்கப்பெற்றவராயிருக்கும் அச்சிவபெருமானைப் பூசை பண்ணி அவருக்குப் பணிவிடைசெய்யும் பொருட்டு வெகு ஆசாரசீலையான தனது குமாரியை அவள் தோழிகளுடன் அச்சிவபெருமானுடைய ஆச்சிரமத்துக்கு அனுப்பினார்.

59. சிவபெருமானும் ஸ்திரீஸாமீப்பியம் தவத்துக்கு சேர்விரோதம் என்றிருந்த போதிலும் சேவகத்தொழில் செய்யவந்த பார்வதியை ஒப்புக்கொண்டார்; ஏனெனில் மனோவிகாரங்கள் உண்டாகும் காரணங்கள் நடுவிலிருந்து கொண்டே எவனொருவன் மனம் கலையாமலிருக்கின்றானோ அவனல்லவோ தீரன்.

60. அப்பார்வதியும் பூஜைக்கு வேண்டிய மலர்களைக்கொய்து கொண்டுவந்து வைப்பதாலும், யாக மேடையை மெழுகிப் பெருக்கி அலங்கரித்து வைப்பதாலும் சிவபெருமானுடைய தவத்துக்கு வேண்டிய தீர்த்தத்தை ஆசாரத்துடன் கொண்டுவந்து வைப்பதாலும் தர்ப்பை முதலிய சாதனங்களைச் சம்பாதித்துக் கொடுப்பதாலும் ஒவ்வொருநாளும் சிவபெருமானை ஆதரிக்கலானள்; அவ்வம்மணி இவ்வாறு தான் பட்ட சிரமத்தை எல்லாம் அச்சிவபெருமானுடைய தலையிலிருந்து பிரகாசிக்கும் சந்திரகிரணங்களினால் அகற்றிக்கொள்ளலானாள்.

### பிரமதேவர் வரம் என்ற இரண்டாவது சருக்கம்.

1. பார்வதி அவ்வண்ணம் சிவபெருமானுக்கு பணிவிடை செய்து கொண்டிருந்த காலத்தில் தாரகாசுரனுடைய ஹிம்சையால் மிகவும் நொந்துபோயிருந்த தேவர்கள் தேவேந்திரனை முன்னிட்டுக் கொண்டு பிரமதேவருடைய இருப்பிடத்தை நாடிச்சென்றார்கள்.

2. வாடிய முகத்துடன் வந்து நின்ற அத்தேவர்கள் முன்பாக விடியற்கால சூரிய பகவான் தூங்கும் தாமரைமலர்களுடன் காணப்படும் தாமரை ஓடைமுன்பாக தோன்றுவது போல பிரமதேவர் தோன்றினார்.

3. அவ்வாறு பிரம தேவர் தரிசனம் கொடுத்தவுடன் அத்தேவர்கள் எல்லாரும் எத்திசையிலும் முகத்தையுடையவனும் எல்லா வித்தைகளுக்கு மீசனும் எல்லா உலகத்தையும் படைத்தவனுமான அத்தேவனைப் பொருளுடன்கூடிய சொற்களால் தோத்திரம் பண்ணலானார்கள்.

### பிரமதேவர் தோத்திரம்

4. தெய்வமே! உலகப்படைப்புக்கு முந்தி ஓரே உருவாய் விளங்கிக்கொண்டும் அதற்கு பிறகு ஸத்வரஜதமோ குணங்களையே பிரித்துக்கொண்டு

பிரும்ம, விஷ்ணு, ருத்திரன் என்ற மூவ்வுருவமாய் பேதங்கொண்டு மும்மூர்த்தியாக விளங்கும் தெய்வமே உமக்கு நமஸ்காரம்.

5. பிறப்பில்லாமல் தோன்றியதெய்வமே! ஜலத்தின் நடுவில் முதல்முதல் உம்மால் விதைக்கப்பட்ட வீண்போகாதவிதையிலிருந்தல்லவா ஸ்தாவர ஜங்கமமான இவ்வுலகம் முழுமையும் உண்டாயிருக்கின்றது.

6. படைப்புக்கு முன் ஒருவனாய் நின்ற தெய்வமே, மூவ்வித அவஸ்தைகளினால் உமது மகிமையை வெளிக்காட்டிக்கொண்டு சங்காரம் பரிபாலனம் படைப்பு இம் மூன்றுக்கும் ஒரே காரணமாய் விளங்குகிறீர்களல்லவா.

7. புருஷன் என்றும் ஸ்திரீ என்றும் இவ்விரு உருவங்களையும் உண்டு பண்ண உமது தேகத்தை நீர் இரண்டாக பாகித்துக்கொண்டு அவ்விரு உருவங்களையும் சிருஷ்டித்தீர்கள் ; ஆகையால் இவ்வுலகத்திலுள்ள எல்லாப்பிராணிகளுக்கும் நீங்கள் தாயும் தந்தையுமாய் விளங்குகின்றீர்களன்றோ !

8. உங்களுக்கு இரவும் பகலும், அதாவது நீங்கள் தூங்கும் காலமும் விழித்திருக்கும் காலமும், இவ்வுலகத்தை அளவிடும் காலமாக ஏற்பட்டு, நீங்கள் தூங்கும் காலம் பிரளயகாலமாகவும் நீங்கள் விழித்திருக்கும் காலம் உலகம் விளங்கும் காலமாயும் காண்கின்றதன்றோ.

9. இப்பிரபஞ்சத்துக்கெல்லாம் நீங்களே காரணமாயிருந்து கொண்டு நீங்கள்மட்டும் காரணமற்றவர்களாய் விளங்குகின்றீர்கள். இவ்வுலகத்தின் அழிவுக்குக்காரணம் நீங்களே ; உமக்கோ அழிவென்பதேயில்லை. இந்த ஜகத்துக்கே ஆதிகாரணம் நீங்கள் ; உமக்கு ஆதிஒருவருமில்லை. இந்த ஜகத்துக்கெல்லாம் ஈசன் நீங்களே ; உமக்குமேல் ஈசன் ஒருவனிருக்கின்றான் என்பது இல்லை.

10. தெய்வமே உமது ஸ்வரூபத்தை நீங்களே அறிந்துகொள்ளுகின்றீர்கள். உம்மை நீரே உண்டாக்கிக்கொள்ளுகின்றீர்கள். எல்லாவிதத்திலும் வெகு ஸாமார்த்தியமுள்ளவராகையால் உமது ஆத்மாவிலேயே நீர் லயத்தையு மடைகின்றீகள். (மற்றவர்களைப்போல கியானம், உத்பத்தி, லயம் இவைகளில் உமக்கு மற்றவர்களுடைய அபேக்ஷை வேண்டாம்.)

11. (ஆறு சமுத்திரம் இவைகள்போல்) ஜலரூபமாயிருப்பவர் நீங்களே ! சேர்க்கையில் கடினமாய் (மலைபோல) இருப்பவரும் நீங்களே. இந்திரியங்களால் குறிப்பிடக்கூடியவர் நீங்களே (மட்பாண்டம்போல) அதாவது இந்திரியங்களால் குறிப்பிடப் படாதபடி பரமாணுரூபமாய் வியாபித்திருப்பவரும் நீங்களே ; (பஞ்சுபோல) லேசாயிருப்பவரும் நீங்களே ; (மலைபோல) கனமாயிருப்பவரும் நீங்களே ; காரியரூபியாயிருப்பவரும் நீங்களே ; காரணரூபியாயிருப்பவரும் நீங்களே ; இவ்வாறு அணிமாதி ஐசுவரியங்களில் உம்மிடம் எல்லாவித ஐசுவரியங்களும் நன்றாக நிரம்பியிருக்கின்றன.

12. தெய்வமே! எந்தச் சொல்லின் ஆரம்பம் ஓங்காரமோ, எந்தச்சொல்லை மூவ்வித நியாயங்களால் (உதாத்தம், அனுதாத்தம, ஸ்வரிதம்) உச்சரிக்க வேண்டுமோ, எந்தச் சொல்லைச் சொல்லியே யாகம் பண்ண வேண்டுமோ, எந்தச் சொல்லில் பயன் மோக்ஷமோ, அந்தச் சொல்லாகிய வேதத்துக்கு தாங்களன்றோ காரணம்.

13. ஸாங்கிய மதமாய் ஆராயுங்கால் உம்மைத்தான் அறம் பொருள் இன்பம் வீடு என்ற எல்லாவித புருஷார்த்தங்களுக்கும் சிறப்பாகும் (பிரகிருதி) மூலகாரண்மாய்ச் சொல்லுகின்றார்கள். அம்மூலகாரணத்தையே நன்று கண்டறிந்து கொண்டு ஒன்றுஞ் செய்யாமலுட்கார்ந்திருக்கும் புருஷனாகவும் உங்களையே சொல்லுகின்றார்கள்.

14. பிதிருக்களுக்கெல்லாம் பிதா நீங்களே. தேவர்களுக்கெல்லாம் தெய்வம் நீங்களே. மேல் என்று சொல்லப்பட்டவைகளுக் கெல்லாம் மேலானவர் நீங்களே. தக்ஷர் முதலியவர்களை எல்லாம் உண்டாக்கினவர் நீங்களே.

15. என்றன்றைக்கும் அழிவின்றி விளங்குபவர் நீங்களே. அக்கினியில் ஓமம் பண்ணப்படும் அவிஸ் ரூபமாயிருப்பவரும் நீங்களே ; யஜமானனாயிருந்து கொண்டு அந்த அவிசை ஓமம் செய்கின்றவரும் நீங்களே ; புசிக்கப்படும் அன்னமும் நீங்களே ; அவ்வன்னத்தை புசிக்கின்றவரும் நீங்களே எல்லாராலும் தவத்தின் மகிமையால் கண்டறிந்து கொள்ளவேண்டியபராபரவஸ்து நீங்களே ; அப்பராபர வஸ்துவை காண்கின்றவரும் நீங்களே ; எல்லாராலும் தியானம் பண்ணப்படும் பொருள் நீங்களே ; அவ்வாறு தியானஞ்செய்கின்றவரும் நீங்களே,

# வியவசாயம்

## AGRICULTURE

எல்லாத் தொழில்களிலும் வியவசாயமே முக்கியமானது என்பதை "மேழிச்செல்வம் கோழைபடாது. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது." என்று சொல்லிய ஔவையாருடைய சிறு வாக்கியங்களாலும் நன்கு விளங்கும். இந்தத் தொழில்தான் தொன்றுதொட்டு நம்முடைய இந்துதேசத்தின் ஜனங்களின் பெரும்பான்மையோருடைய ஜீவனோபாயம். ஆனால் அயல்நாட்டார்கள் இந்தத் தொழிலின் அபிவிருத்தியைநாடி பலவித சாஸ்திரங்களிற் கற்றுணர்ந்தோர் ஒன்றுசேர்ந்து தங்களுடைய சாஸ்திரப் பயிற்சிகளையும் அநுபவத்தையுங்கொண்டு இத்தொழிலை அபிவிருத்திசெய்து அதிக லாபம் அடைகிறார்கள். நாமும் இவ்வாறு லாபமடைய நம்மால் கூடுமான அளவு முயற்சி யெடுத்துக்கொள்ளவேண்டும். நமக்கு உதவி புரிவதற்காகவே கவர்ன்மெண்டில் விவசாய கலாசாலை (Agricultural College) ஏற்படுத்தியும், பண்ணைகள் வைத்தும், விவசாய டிபார்ட்மெண்டு தனியாக ஏற்படுத்தியும் இருக்கிறார்கள். நம் தேசத்துப்பயிரிடும் குடிகளும் முக்கியமான விருத்தி அம்சங்களை கவனித்து அவ்வாறு தங்களால் கூடுமானவரையில் இலாபம் அடையும்பொருட்டு சில விவசாயச்சங்கங்களும் ஏற்படுத்தி விவசாயவிஷயமாய் சிந்தனையும் செய்துவருகிறார்கள். ஆனால் இச்சங்கத்தில் சேர்ந்தவர்களுக்கு இதுவிஷயமாய்ப் போதுமானஅளவு கவனஞ் செலுத்த அவகாசப்படுகிறதில்லை. நாமும் அடிக்கடி இந்தப் பத்திரிகைமூலமாய் விவசாயவிஷயமாய் சில குறிப்புகள் எழுதத்துவக்கியிருக்கிறோம். இது தடையின்றி முடிவுபெறுமாறு கடவுள் நமக்குத் துணைசெய்வாராக:—

2. விவசாயத்திற்கு இன்றியமையாதது நீர்வளம். புஞ்செய் நிலங்களுக்கு மழையும், நஞ்செய் நிலங்களுக்கு ஆறு ஏரி முதலிய பாசனங்களில் ஜலக்குறைவு இல்லாமலும், தோட்டக்கால் நிலங்களுக்குக் கிணறுகளில் போதுமான ஜலமும் இருக்கவேண்டியது அவசியம். இப்பொழுதோ மழை சரியாய்ப் பெய்கிறதில்லை. சொல்பமாகப் பெய்யும் மழையை ஆவியாய்ப் போகாமல் பூமியிலேயே பயிருக்கு உதவும்படி காப்பாற்றிவைக்க ஒவ்வொரு குடியானவனும் முயலவேண்டும். இதற்கு மழை பெய்து நிலத்தில் ஈரமிருக்கும்பொழுதே நல்ல கலப்பைகளால் நிலத்தை நன்றாயுழுது புழுதியாக்கவேண்டும். நாட்டுக்கலப்பைகளைவிட இரும்புக் கலப்பைகள் நன்றாயும் அதிக விலை சகாயமாயும் வேலை செய்கிறதாவென்பதை நிதர்சனமாகத் தெரிந்துகொண்டு சமயத்திற்குத் தக்கபடி இரும்புக்கலப்பைகளைக்கொண்டோ அல்லது நல்லநாட்டுக் கலப்பைகளைக்கொண்டோ அடிமண் நல்லமண்ணாயிருந்தால் ஆழமாய் உழவேண்டும். உழுவதற்கு இரும்புக்கலப்பை நல்லதென்பதை ஒவ்வொருகுடியானவனும் தானே உழுதுபார்த்து திருப்தியடையவேண்டும். இரும்புக்கலப்பை, மண்ணைமடித்துப் போடுகிறபடியால் நிலம் நன்றாய்ப் புழுதிசெய்யப்படுகிறது. நாட்டுக்கலப்பையாலோ அவ்வளவு நன்றாய் வேலை செய்யப்படுகிறதில்லை. இது தவிர பல்லாரி முதலிய வடஜில்லாக்களில் வழங்கிவரும் வேர்வாரி (Harrows) குண்டகா தந்துலு முதலிய ஆயுதங்களையும் தமிழ்ஜில்லாக்களில் உபயோகப்படுத்தலாம். விதை கையினால் தெளிப்பதற்குப் பதிலாக கொர்ருவினால் படைச்சாலாக விதைத்தால் இதன் மத்தியில் தந்துலுவினால் அதிக செலவில்லாமல் அடிக்கடி வேலைசெய்து நிலத்தைப் புழுதியாக்கி ஈரம் சார்க்கவைப்பதுடன் புல்முதலிய களைகளையும் தொலைக்கலாம். கொர்ருவினால் விதைப்பதற்கும் தந்துலுவினால் களை யெடுப்பதற்கும் தென்தேசக்குடிகளுக்குப் பழக்கம்வேண்டும். இதனால் வேலைசெய்து பயில இவ்வேலைசெய்வதில் தேர்ந்த ஒரு பல்லாரி ஜில்லாகுடியானவன் அல்லது கூலியைத் தமிழ்ஜில்லாவுக்குக் கொண்டுவந்து அவனால்நம்முடைய தென்ஜில்லாக்குடித்தனக்காரர்களும் கூலியாட்களும் அவ்வாறு வேலைசெய்யக் கற்றுக்கொள்ளலாம். இவ்வாறு இப்பொழுது (Court of Wards) எஸ்டேட்டுகளில் நடந்துவருகிறது. இம்மாதிரி (Agricultural Associations) விவசாயச் சங்கங்களும் செய்தால் நலம். நம்முடைய தமிழ்தேசத்தார் இம்மாதிரியான ஆயுதங்களைக் கொண்டு தங்கள் சிறு மாடுகளால் வேலைசெய்வது அசாத்தியம் என்பதை ஒருவாறு காரணமாகச் சொல்லலாம். இக்குறைவை நீக்குவது வெகு அவசியம். நல்ல பொறுக்கியெடுத்த உறத்த காளைமாடுகளைக் கொண்டு பசமாடுகளைப் பலன்பட

வைத்து நல்லஜாதி உறத்த எருதுகள் உற்பத்தி செய்து தீவனத்துக்கு சிலாக்கியமான சோளப்பயிர், கொழுக்கட்டைப்புல், கினிகிராஸ், (Guinea Grass) முதலிய புல் வகைகளுக்களை வைத்து விருத்தி செய்தும், மணிலாப்பிண்ணாக்கு, பருத்திக்கொட்டை, கொள்முதலிய பலமுள்ள தீனிகளைக் கொடுத்தும் மாடுகளைக் குறைவின்றிப் பாதுகாத்துவந்தால் மேற்கண்ட வடஜில்லாக்களின் ஆயுதங்களைக் கொண்டு வேலை செய்யக்கூடிய பலமுள்ள மாடுகள் உண்டாகும் என்பதற்கு ஐயமில்லை. குடிகள் ஒவ்வொருவரிடமுமிருக்கும் மட்டமான காளைக்கன்றுகளால் தங்களுடைய பசுமாடுகள் பலன்படாமலிருக்கும்பொருட்டு தக்க சிறுபருவத்திலேயே காயடித்து, இதற்கென்றே பொறுக்கியெடுத்த நன்றாய்ப் பாதுகாத்துவரும் காளைமாடுகளைக் கொண்டே (Selected breeding bulls) தங்கள் பசுக்களைப் பலன்படச்செய்வது ஒவ்வொரு குடியானவனுடைய முக்கியவேலையாயிருக்கிறது. ஆனால் சொல்ப நிலமும் சொல்ப மாடுகன்றுகளும் வைத்துக்கொண்டு இருக்கும் நம்முடைய இராஜதானியின் குடிகள் ஒவ்வொருவரும் தனித்தனியே பொறுக்கியெடுத்த காளை (Selected breeding bulls) வைப்பது அசாத்தியம். இதற்கு அங்கங்கேயிருக்கும் விவசாயச் சங்கங்கள் முயற்சி யெடுத்துக்கொண்டு குடியானவர்களுக்குச் சகாயம் செய்தால் வெகு அநுகூலமாயிருக்கும். கவர்ன்மெண்டாலும் ஒவ்வொரு தாலூகாவின் முக்கியமான கிராமங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்று அல்லது இரண்டு காளைமாடுகள் வைத்து நம்முடைய தேசத்து மாடுகளை விருத்திசெய்யும்படி பிரயத்தனஞ் செய்ய அங்கங்குள்ள விவசாயச் சங்கங்கள் கேட்டுக்கொள்ளவேண்டும். நல்ல விவேகமும் குடிகளிடத்தில் அன்புமுள்ள பெரிய குடித்தனக்காரர்கள் ஒவ்வொருவரும் ஒன்று அல்லது இரண்டு காளைமாடுகளை வைத்து நல்லமாடுகளை உற்பத்தி செய்விக்கலாம்.

3. மாடுகளுக்குப் புஷ்டியான தீவனம் போடுவதனால் நல்ல எருகிடைக்கும். மாடுகளின் மலஜலாதிகளும் வீட்டுச் சாம்பலும், கழித்த புல் வைக்கோல்களுந் தான் நமது தேசத்தில் முக்கியமான எரு. இதைச் சரியாய்ப் பராமரித்து மூத்திரத்தையும் சாணத்தின் சத்துகளையும் ஆவியாய்ப் போகாமல் பாதுகார்க்கும்பொருட்டு மண்ணினால் மூடிவைத்து வெய்யிலிலும் மழையிலும் சேதப்படாமலிருக்கும்பொருட்டு ஒரு கூரை அல்லது ஓடுபோட்ட இடங்களில் குழிகளில் கொட்டிப் பாதுகார்ப்பது அவசியம். தென் ஜில்லாக்களில் மாடுகளின் சாணத்தை முட்டைதட்டி உபயோகப்படுத்துவதும் விற்பதுமான ஒரு கெட்டவழக்கத்தை நீக்க நாம் எல்லோரும் முயலவேண்டும். மாடுகள் போடும் சாணம் முழுதும் எருவாகவே உபயோகப்படவேண்டும். மூத்திரத்தை எருவுடன் சேர்க்கக் கழிந்தபுல் வைக்கோல் முதலியவைகளை மாடுகளின் படுக்கைக்கு உபயோகப்படுத்தவேண்டும். ஆடுமாடுகளை நிலத்தில் கட்டுவதனால் மலஜலாதிகள் இரண்டும் வீண்போகாமல் ஒருவாறு நிலத்திற்கு உபயோகமாகிறது; ஆனாலும் கிடைநின்ற நிலத்தை அப்போதைக்கப்போது உழுது எருக்களை மண்ணுடன் சேர்ப்பிப்பது அசாத்தியமாகிறது.

நெற்பயிரிடும் நஞ்செய் நிலங்களுக்கு கொளிஞ்சியைப் பசுந்தாள் எருவாகப் பெரும்பான்மையோர் உபயோகித்து வருகிறார்கள். இந்தத் தழை போதுமான அளவு கிடைக்காத இடங்களில் வேப்பந்தழை, எருக்கு, வாதநாராயணன், பூவரசு, புங்குமுதலிய தழைகளையும் மலையோரங்களிலிருக்கும் காடுகளிலிருந்தும் அதிகபணம் சிலவுசெய்து பலவித தழைகளை வண்டிவண்டியாய்க் குடிகள் கொண்டுபோவதை நாம் பலதடவைகளிலும் பார்த்திருக்கிறோம். நமக்குத் தேவையான அளவு மேற்படி தழைகள் கிடைக்காததால் தக்க உற மேற்றாமல் பயிரிடும்படியும் நேரிடுகிறது. இவைகள் சுலபத்தில் கிடைக்கக்கூடாத இடங்களில் நஞ்செயில் நெல் அறுப்பதற்கு ஒருவாரம் அல்லது 10 நாளைக்கு முந்தியே பசுந்தாள் எருவுக்காக கொளிஞ்சிவிதையை விதைத்துவிட்டால் நெல்லறுத்தவுடன் பூமி காயாமல் அந்த ஈரத்திலேயே போதுமான கொளிஞ்சியைப் பசுந்தாள் எருவுக்காக உற்பத்தி செய்துகொள்ளலாம். நெல்லறுத்தபிறகு உழுது சணப்புவிதை (Sem-hemp) விதைத்தால் விதைத்த இரண்டு மாதத்திற்குள், நன்றாய்ப் புஷ்பித்து வருங்காலத்தில் அவைகளை மேற்படி நிலத்திலேயே பசுந்தாள் எருவாக உபயோகப்படுத்தலாம். இவ்வாறு செய்வதால் மேற்படி பசுந்தாள் எருவின் வேர்ப்பருக்கள் ஆகாயத்திலிருந்து சிகணவாயுவை கிரகித்து மண்ணுடன் சேர்ப்பித்து நல்ல உறத்த எருவைக் கொடுக்கின்றன.

S. சிதம்பர அய்யர்.

# சுகாதாரவிளக்கம்

## HYGIENE

(பண்டித நடேசசாஸ்திரியார் எழுதியது)

(நான்காவது அத்தியாயம்).

### வாயு

46. ஆகாயம் உயிர்வாழ்க்கைக்கு அவசியம்.— ஜீவனுக்கு ஆகாரம் எவ்வளவு தேவையோ அது போலவே சுவாசிக்க நல்ல ஆகாயமும் தேவை. நமது தேகத்துக்குள் எப்பொழுதும் ஓடும் இரத்தமானது அடிக்கடி நமது சுவாஸாசயத்தின் மூலமாய்ச் சுத்த ஆகாயத்தை வெளியிலிருந்து பெற்றுப் பரிசுத்தப்படுத்தப் பட்டே வருகின்றது. நாம் பிறக்கும் பொழுது முதன் முதல் உட்கொள்ளுவது ஆகாயந்தான். இவ்வுலகத்தை விட்டு இறந்து போகும் பொழுதும் நமக்குப் பின் கடைசியாக நாம் விட்டுப் போவதும் ஆகாயந்தான். தேக சௌக்கியத்திற்கு பரிசுத்தமான ஆகாயம் வெகு முக்கியம். இப்பரிசுத்தம் குறையக்குறைய தேக சௌக்கியமும் குன்றும். இப்பரிசுத்தமான ஆகாயம் நமக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு நமது குதிரைகள் மாடுகள் முதலான கால்நடைகளுக்கும் தேவை.

47. நல்ல ஆகாயம்.— அதாவது பரிசுத்தமான வாயு. இதை நாம் ஒரு கணக்காக நிறை எடுத்து சோதித்துப் பார்ப்போமேயானால் இதில் ஒரு ஆயிரத்திற் சற்றேறக்குறைய 209½ பங்கு பிராணவாயுவாகவும், 790 பங்கு உப்பானவாயுவாகவும் ½ பங்கு கரிமலவாயுவாகவும் இருக்கக் காணுகின்றோம்.

இதன்றியிற் கால நிலைமைக்குத் தக்கபடி ஜலவாயுவும் இன்னும்மற்ற அணுக்களும் இவ்வாயுவுடன் கலந்திருக்கும். மலைநாடுகளின் உன்னத பிரதேசங்களில் சுத்தமாக அடிக்கும் காற்றிற் பிராணவாயு 209¾ பங்கிருக்கும். நகரங்களில் அதே பிராணவாயுவின் பரிமாணம் 208¾ முதல் 209 வரையிலிருக்கும். நீராவி ஆகாயத்திற் கலந்திருப்பது அந்தந்த தேசநிலைமையால் வேறுபடும்.

48. ஆகாயத்தின் அசுத்தம்.— தூமம் ஆவி, கனபதார்த்தங்களின் தூசுகள் இவைகள்போன்ற எவ்வளவோ வஸ்துக்கள் அடிக்கடி ஆகாயத்திற் சம்பந்தித்துக் கொண்டேயிருக்கின்றன. அவ்வாகாயத்தை நாம் முதன்முதல் மூகரும்பொழுது அதிலிருக்கும் பேதம் நமக்கு விளங்கும். கொஞ்சநேரம் அதையே முகர்ந்தபின் அதின் பேதமே நமக்குத் தெரியாமல் அதே சரியான ஆகாயமாகத் தோன்றும். நிலத்தின்மேல் பரந்திருக்கும் ஆகாயத்தைப் பரிசுத்தமாக்க எப்பொழுதும் அநேக ஏற்பாடுகள் பூமியிலும் அந்தரிக்ஷத்திலும் நடந்துகொண்டேயிருக்கின்றன.

49. ஆகாயம் பரிசுத்தமாகும் முறைகள்:— தூமங்களும் ஆவிகளும் அந்தரிக்ஷத்தில் ஏறவே உடைபட்டுக் காற்றால் சிதறிவிடப்பட்டு தேகசௌக்கியத்திற்குக் குறைவை விளைவிக்காதவண்ணம் பிரஸாரணம் செய்யப்படுகின்றன. மழைபொழிவதாலும் இவைகள் சிலவேளை அகலும். காற்றால் அந்தரிக்ஷத்தில் கிளப்பப்படும் கனபதார்த்தங்கள் தங்கள் கனத்தின் காரணத்தாலேயே பூமியில் மறுபடி இறங்கிப்படிகின்றன. இக்கனபதார்த்தங்கள் பஞ்சபூத ஸம்பந்தமாகவிருந்தால் அவைகள் பிரிந்து தங்கள் தங்கள் வகையைச் சேருகின்றன. ஆகையால் ஆகாயத்தைப் பரிசுத்தம்பண்ணிவைக்க முக்கிய சாதனங்களாகிய மழை, காற்று, பிரஸாரணம் அதாவது காற்றால் பரப்பப்படுதல் இவைகளால் நமக்கு வேண்டிய ஆகாயம் எப்பொழுதும் பரிசுத்தமாகப் பண்ணப்படுகின்றது. இவைகளன்றியில் ஓஷதிவர்க்கங்கள் ஒருவாறு கரிமலவாயுவை கிரகித்துக் கொண்டு அதனால் வளருவதால் அவைகளும் ஆகாயத்தைப் பரிசுத்தமாக பண்ணிக்கொண்டேயிருக்கின்றன. இவ்விதமாக இயல்பாகவே ஆகாயத்தைப் பரிசுத்தம் பண்ணிக்கொண்டிருக்க இச்சாதனங்கள் ஏற்படாவிடில் மனிதர்களாகிய நாம் சுகமாக உயிருடன் வாழப் பரிசுத்தமான ஆகாயம் இருக்கவே மாட்டாது.

50. சுவாஸிப்பதாவதென்ன?— நாம் சுவாஸிக்கும் ஆகாயத்தை நாம் நமது வாயாலும் மூக்காலும், தொண்டையிலும் மார்பிலும் அமைக்கப்பட்டிருக்கும் சுவாஸக்குழல்களாலும், சுவாசக்கருவியாலும் நாம் உட்கொள்ளுகின்றோம். அவ்வண்ணம், நாம்

* Oxygen 209·6. Nitrogen 790·0, Carbonic acid 0·4

சுவாஸிக்கும் ஆகாயத்தில் நமது ஸ்திதிக்குத் தக்கபடி காஸ் (gas) என்னும் வாயு, தாதுக்களையும் பூண்டுகளையும் சேர்ந்த கனபதார்த்தங்கள் ஆகிய இவைகள் கலந்திருக்கின்றன. மண் தூசு, கந்தக சம்பந்தமான தூசு, உலோக ஸம்பந்தமான தூசு, இவைகளைப் போன்றவைகளை நாம் சுவாஸிப்பதனால் தாதுக்களைச் சேர்ந்த கனபதார்த்தங்களை நாம் சுவாசிக்கின்றோம். நெல் அடிக்கப்படும் களத்தில் உண்டாகும் தூசுகள், மலர்களிலிருக்கும் பூந்தாதுகள் இவைகளைப் போன்றவைகளை நாம் முகருவதனால் பூண்டுசம்பந்தமான கனபதார்த்தங்களை நாம் உட்கொள்ளுகின்றோம். காஸ் (gas) என்னும் வாயுவை நாம் சுவாஸிக்கும் பொழுது அவ்வாயு ரத்தத்துடன் வெகுவேகமாய்க் கலக்கின்றது. நமது சுவாஸக்கருவி நமது தேகத்துக்குள் முடியுமிடத்தில் அதின் உள் தோலில் சுமார் 50 அல்லது 60 லட்சம் சிறு துவாரங்கள் அமைந்த பலதுணிவாய்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இத்துவாரங்களுக்கு (Air Cells) காற்றுக்கண்கள் என்று பெயர். இக்கண்கள் வழியாக நாம் சுவாஸிக்கும் வாயுவிலிருக்கும் காஸ் (gas) என்ற வாயு நமது ரத்தத்திற் கலந்து விடுகின்றது.

நாம் சுவாசிக்கும் ஆகாயத்திலிருக்கும் கனபதார்த்தங்கள் பெரும்பாலும் உட்செல்லாமலே மூக்கின் துவாரங்களிலும் வாயிலும் படிந்து சுவாஸப்பைக்கு வெளியிலேயே நின்றுவிடும். சில சமயங்களில் சுவாசப்பையி லிறங்கினால் அவைகள் அழிந்து போகும் குணமுள்ளவைகளாக விருந்தால் அழியும் அல்லது மாறுபடும். எடுத்துத்தான் தீரவேண்டியவைகளாக விருந்தால் எடுபடுகின்ற வரையில் உபத்திரவத்தை விளைவிக்கும் அல்லது சுவாஸாசயத்தினுள் தசையால் மூடப்பட்டு உடலுக்குள்ளேயே நிற்கும். வாயிலும் மூக்கிலும் நின்றுவிடும் பதார்த்தங்கள் விழுங்கப்பட்டு தேகத்திற் செறித்துப் போகின்றன. ஆகையால் நாம் நமது வாயையும் நாசித்துவாரங்களையும் அடிக்கடி அலம்பி பரிசுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு நாம் எச்சரிக்க முக்கியமான காரணம் என்ன வெனில் விஷஜ்வரம் விஷபேதி இவைகளின் மேல் வீசிவரும் காற்றை நாம் சுவாசிக்க நேரிட்டால் அது சுவாசாசயத்திற் புகும் முன் அதிலிருக்கும் சிறு கனபதார்த்தங்கள் வாயிலும் மூக்கிலும் படிந்து அவைகளை நாம் விழுங்கி விடுகின்றபடியால் இந்நோய்கள் நம்மைப்பற்றிக் கொள்ளுகின்றன. ஆசையால் நாம் வாயையும் மூக்கையும் அடிக்கடி அலம்பி பரிசுத்தமாய் வைத்துக் கொள்ளுவதால் பலவித நன்மைகளுள.

51. ஆகாயத்தில் பிடிப்பின்றி மிதக்கும் பதார்த்தங்கள்.—தாது வர்க்கத்தையும் ஓஷதிவர்க்கத்தையும் சேர்ந்த பலவித கனபதார்த்தங்கள் வண்டியோடும்பொழுது ரஸ்தாக்களிற் கிளம்பும் தூசுகள் ஆகாயத்திலும் மண்ணிலும் மடிந்து அழுகுகின்ற ஜீவசெந்துக்களின், நாற்றத்திற் உண்டாகும் பல கனபதார்த்தங்கள், வித்து, இலை, புஷ்பம் இவைகளின் அணுக்கள் பூந்தாதுகள், சமுத்திரக் கரையோரம் உவர் பதார்த்தங்கள், ரம்பக்காரன் வேலை செய்யுமிடத்தில் ரம்பத்தூள், கற்பொளியுமிடத்து கல்தூள் இவை போன்ற பலவித பதார்த்தங்கள் ஆகாயத்தில் இடத்துக்குத் தக்கபடி கலந்திருக்கும். கல்தச்சன் ரம்பக்காரன் முதலான தொழிலாளிகள் தத்தம் தொழில் செய்யும்பொழுது அத்தூட்களை சுவாசிக்கின்றார்கள். வியாதிக்காரன் படுத்திருக்கும் அறையில் தாதுவர்க்கத்தைச் சேர்ந்த கனபதார்த்தங்கள் அதிகமாகக் கலந்திருக்கின்றன.

52. நாம் சுவாசிக்கும் ஆகாயம் கெடுவதெப்படி?—ஒவ்வொருவனும் தினந்தோறும் 15 கன அடி அளவு கரிமலவாயுவைத் தனது சுவாசாசயத்தால் வெளிவிடுகின்றான். பெண்டுகளும் குழந்தைகளும் இவ்வளவிற்குக் கொஞ்சம் குறைவாக வெளிவிடுகின்றார்கள். தேகத்திலிருந்து வெளிக்கிளம்பும் வெப்பம் வேர்வை முதலிய நாற்றம், ஒருவன் தூங்கும் அறையில் எரியும் விளக்கு இக்காரணங்களால் ஒருவன் தூங்கும் அறையிலிருக்கும் பிராணவாயு குறையும். இவ்வண்ணம் கெட்டுப்போகாமலிருக்க அவ்வறையை வேண்டிய அளவுப்படி கட்டி திறப்புகளை ஏராளமாய் வைக்கின்றார்கள். இக்காலத்தில் கட்டப்படும் ஆஸ்பத்திரி அறைகள், ராணுவசாலைகள், கைதிகளை வைக்கும் அறைகள் இவைகளெல்லாம் கணக்குப்படி கட்டுகின்றார்கள். வாயு கெட பல காரணங்கள் உள. நெருப்பு எரித்தல், விளக்கெரித்தல், புகைச்சுருட்டுப் பிடித்து புகையை விடுதல், ஊதுவத்தி கொளுத்திவைத்தல், சாக்கடை கக்கூசு முதலிய விடங்களிலுண்டாகும் நாற்றம்

ஸமாதி, மயானம் இவைகளிலிருந்து கிளம்பும் விஷவாயு, சதுப்புநிலம், கனி யிவைகளிலிருந்து கிளம்பும் மலவாயு இவைகளெல்லாம் சுத்தாகாயத்தைக் கெடுக்கின்றன.

53. சாக்கடை விஷக்காற்று.—(Sulphurated Hydrogen) நகரங்களில் சாக்கடையிற் பல் சிறு விஷஜெந்துக்கள் ஓஷதி விசேஷங்கள் இவைகளழுகுவதால் ஒரு கொடிய விஷக்காற்று உண்டாகின்றது. இதைச் சாக்கடை விஷக்காற்று என்று மொத்தமாகச் சொல்லுவார்கள். இவ்விஷக்காற்றால் விளையும் நோய்களுக்கு அளவேயில்லை. பல நாட்கள் சாக்கடை கழுவப்படாதிருப்பதால் இக்காற்றுச் சில சமயங்களில் ஏராளமாகச் சிலசாக்கடைகளுக்குள் உண்டாகிறது. அச்சாக்கடைகள் கழுவப்படும்பொழுது அவைகளிலிருந்து கிளம்பும் விஷக்காற்றால் பலர் மரணமடைந்திருக்கிறார்கள். இவ்வண்ணம் இச்சாக்கடை விஷக்காற்று பிராணனையே ஒரு சமயத்தில் வாங்கிவிடுவதுடன் மயக்கம், விஷபேதி வாந்தி முதலான நோய்களுக்கும் காரணமாயிருக்கின்றது. இவ்விஷவாயு சாக்கடையில் மட்டும் உண்டாகின்றதென்று எண்ணவேண்டாம். நமது வீட்டைச்சுற்றிப் பல நாற்றப் பொருள்களை நாம் போடுவதாலும், இலைச் சருகுகள் வாழை மட்டைகள், எச்சிலிலைகள், மலமூத்திரங்கள், பழய ஜோடு செருப்புகள், உடைந்த சட்டி, சாம்பல்கள், கந்தைகள், பழய பாய்கள் இவைகள் குவிப்பதலாலும்உண்டாகின்றது; மாட்டுக் கொட்டில்கள் குதிரை லாயங்கள் இவைகளை அசுத்தமாய் வைப்பதாலும் விளையும்.

54. வாயு கெடுவதால் உண்டாகும் நோய்கள். சுவாசாசயத்திற்குப் போதுமான நற்காற்றில்லாத பட்சத்தில் நமது போஜனத்தை நாம் ஜீர்ணம் செய்துகொள்ளும் சக்தி (Digestive power) கொஞ்சங் கொஞ்சமாகக் குறைவுபடுகின்றது. முதன் முதல் அதிகமாகப் பலவீனப்படுவது சுவாசாசயமே. அவ்வாறு சுவாசாசயம் தனது வலிமையையிழப்பதால், கபம், சுவாசக்குழல்களிற்புண், காசம், கபவாத சுவரம் முதலிய நோய்கள் உண்டாகின்றன. பஞ்சு அடிப்பவர்கள், சணல்நார் திரிப்பவர்கள், போடிப்பவர்கள், கல்தச்சர்கள், ரம்பவேலைக்காரர்கள், பித்தளை தாமிரம் இவ்வித உலோகங்களை உருக்கிவேலைசெய்பவர்கள் இவர்களெல்லோரும் தத்தம் தொழில்களில் உண்டாகும் தூசுக்கும் விஷக்காற்றுக்கும் தக்கபடி நோயால் வருந்துவார்கள். வர்ணவேலை செய்கின்றவர்கள், வர்ணத்தில் ஓர்வித விஷம் கலந்திருப்பதால் அந்நாற்றத்தை முகருவதால் கண்ணோய், பல்நோய், காசம், கபம், தாகம் அசீர்ணம், அதிசாரம் முதலிய பலவித நோய்களால் வருத்தப்படுவார்கள். பலதொழில்களில் பலவித விஷவாயு உண்டாகின்றது. அவைகள் ஒவ்வொன்றையும் நாமிங்கு எடுத்துச் சொல்ல முடியா.

முக்கியமாய் நாம் சொல்லவேண்டியதென்னவெனில், கெட்டவாயுவை நாம் இடைவிடாமல் சுவாசிக்கும்படி நேர்ந்தால் அதனாற் பலவிதத் தீங்குகள் விளைகின்றன. முதன்முதல் தேகம் வெளிர்க்கும். பிறகு பசி மந்திக்கும்; தேகபலம் குன்றும்; மனதின் உற்சாகம் குறையும்; கண்டமாலை முதலான நோய்கள் உற்பத்தியாகும்.

55. காளவாய்.—செங்கல் சுண்ணாம்பு இவைகளின் காளவாய்களிற் புகை எவ்வளவு அருகாமையில் நமக்கிருக்கின்றதோ அவ்வளவும் விஷம். அவ்வாறே மயானப்புகை கல்லறையிலிருந்து கிளம்பும் விஷக்காற்று. இதற்காகவே இவைகளை நகரங்களுக் கப்பால் அமைக்கின்றார்கள்.

56. வாயு பிரசாரம்.—பலவித காரணங்களால் கெட்டுப்போகும்காற்றைப்பரிசுத்தமாகப்பண்ண வாயுபிரசாரமிருக்கவேண்டும். இவ்வாயு பிரசாரம்இயல்பாகவே காற்றடிப்பதால் உண்டாகின்றது. இவ்வாயு பிரசாரம் நமக்குச் சுகமாய் உண்டாக நமது அறைகளில் எதிரும் எதிருமாக நாம் ஜன்னல்களை வைக்கவேண்டும். எதிரும் எதிருமாக ஜன்னல்களிருந்தால்தான் பரிசுத்தக்காற்று உட்புகுவதும் விஷக்காற்று அகலுவதும் சாத்தியமாகும். இயல்பாகக் காற்று வீசுவது உஷ்ணதேசமாகிய நமது நாட்டில் எப்பொழுதும் உண்டாகையால் நாம் கிருத்திரமமாகக் காற்று உண்டாக்கிக் கொள்ளவேண்டியதில்லை.

---

சக்திக்கு மிஞ்சின உழைப்பு:—நாம் எப்பொழுதும் நமது சக்திக்குத் தகுந்தபடி உழைக்கவேண்டுமேயல்லாது அதற்கு அதிகமாக உழைக்க முயன்றால் நமக்கு விளைவது அனர்த்தமேயல்லாது வேறல்ல. ஒவ்வொரு புருஷனுக்கும் அல்லது ஸ்திரீக்கும் இவ்வளவு தேகபலம் என்பது அவரவர்களுக்கு நன்றாகத் தெரியுமல்லவா? அதற்கு தக்கபடி அவர்கள் உழைத்தால் க்ஷேமம்; மேலாக உழைப்பது ஒருபடியில் நான்குபடி அளக்க முயலுவதுபோலாம். 10-அடிதாண்டும் குதிரையை 15 அடி தாண்டச்செய்தால் அது உடலறுந்து விழவேண்டுமேயல்லாது அத்தூரத்தைத்தாண்டி உயிர்பிழைக்குமா? அதுபோலவேதான் தங்கள் சக்திக்கு அதிகமாக உழைக்கும் மானிடர்களும்.

கோபம், துக்கம், ஏக்கம், கவலை, அதிக உழைப்பு, இவைகளைத்தான் முக்கியமாய நமது தேக சௌக்கியத்தைக் கெடுக்கும் மனோபாவங்களாய சொல்லுவார்கள். இவைகளை நம்மைவிட்டு அகற்றி நாம் க்ஷேமமடையவேண்டும்.

அங்கம் 1.

## நீலி வசீகரம்

### TAMING OF THE SHREW

களம் 2.—மதுரைவீதி பிரதாபருத்திர தேவரின் மாளிகை முன்பாக

நாராயணத் தேவரும் பொன்னனும் வருதல்

நா.—உறையூரிலிருந்து மதுரைக்குப் புறப்படும் போது இங்குள்ள நண்பர்களைக் காணவேண்டுமென்றும் ஒருவிருப்பம் இருந்தது; எனது உயிர்த் துணைவரான பிரதாப ருத்திரதேவரின் மாளிகை இதுவென்றுதான் தோன்றுகிறது; கதவை இடித்துப்பார்.

பொ.—இந்த வீடென்றுதான் எனக்கு ஞாபகம். அவர் இருக்கிறாரோ, இல்லையோ?

நா.—கதவைத் தட்டிப்பார்; இருந்தால் பார்ப்போம். இல்லாதபோனால் போய்விடுவோமே; இதிலென்ன சிரமம் (பொன்னன் கதவைத்தட்டல்)

பிரதாப ருத்திரதேவர் வருதல்.

பி.—வாருங்கள், நாராயணதேவர்வாள்! எப்பொழுது ஊரிலிருந்து? பார்த்து வெகுநாளாய்விட்டது. இன்னும் யார்கூட? பொன்னனா? வாடா பொன்னா, சௌக்கியமா?

பொ.—இருக்கிறேன் எஜமானர்கள் தயவினால்.

பி.—இப்படி இந்தகொட்டகையில் உட்காருவோம் வாருங்கள். என்ன விசேஷம் வந்தது? அப்பா சௌக்கியமாக விருக்கிறாரா? குடும்ப யோகக்ஷேமம் எப்படியிருக்கிறது?

நா.—எல்லாரும் க்ஷேமந்தான். உள்ளூரில் சுவாரசியம் ஒன்றுமில்லை. இப்படிவெளியில் புறப்பட்டுப் போகலாமென்று வந்தேன். அப்பா இறந்து போய் விட்டார்.

பி.—இறந்துபோய் விட்டாரா? எப்பொழுது? என்ன சிக்கு?

நா.—போய் இரண்டு மூன்று மாதமாய் விட்டது; உமக்குக்கூடக் கடிதம் அனுப்பியிருந்ததாக ஞாபகம்.

பி.—அடடடா! ரொம்பவும் நல்லவர், இனிமேல் அவரைப்போல் பிரபுவை எங்கே பார்க்கப் போகிறோம்.—ஆமாம், வேறு விசேஷம் ஏதாவதுண்டோ?

நா.—என்ன, ஒன்றும் மனதுக்கு இயைந்ததாகவில்லை; எங்கேயாவது இந்தப் பக்கங்களில் நல்லபெண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கொண்டு போகலாமென்று வந்தேன். அதற்குவேண்டிய செலவுக்குப் பணம் கையிலிருக்கிறது.

பி.—அப்படியானால் இங்கே ஒரு பெண் இருக்கிறாள்; ஆஸ்தி விசேஷமாக விருக்கிறது; சகோதரர் இல்லை; ஒரே ஒரு சகோதரி; கல்யாணத்துக்கு இசைந்ததுதான்; இருந்தாலும் உனக்கு அதைப்பற்றிப் பேசுவதில் எனக்கு கொஞ்சமேனும் இஷ்டமில்லை.

நா.—இஷ்டமில்லாத போனால், இவ்வளவு தூரம் வர்ணித்துப்பேசுவானேன்? என் இஷ்டமில்லை?

பி.—அழகு, செல்வம் முதலியவற்றில் குறையில்லை; பெண்மாத்திரம்தான் துஷ்டை அடங்காப்பிடாரி.

நா.—இருந்தால் இருக்கட்டுமே; பணம் இருக்கிறதல்லவா? எனக்குப் பணந்தான் பிரதானம்; ஸாக்ஷாத் ராக்ஷஸியாக விருந்தாலும் எனக்குத் திருப்திதான். ஔவையாருக்குச் சோறுபோட வேண்டுமென்று ஒருமனிதன் தன் மனைவிக்கு ஈருவிப் பேன்பார்த்து, ஸர்வோபசாரம் செய்து கெஞ்சிக் கேட்டதும், அருகில் கிடந்த விளக்குமாற்றை எடுத்துக்கொண்டு புறப்பட்டாளாமே அவளைப்போல் விருந்தாலும் எனக்குத் திருப்திதான்; இங்கே நான் வந்தது, பணக்கார வீட்டில் கல்யாணம்பண்ணிக் கொள்ளத்தானே; பணம் வந்தால் சௌக்கியமும் சந்தோஷமும் தாமே வந்து விடும்.

பொ.—பணம் இருந்தால், ஒரு தொண்ணூறு வயதுக் கிழவிக்கூட ஐயா கட்டிக்கொண்டுவிடுவார்போ லிருக்கிறது.

பி.—ஆனால் சொல்லுகிறேன்; கேளும்; பெண் நல்ல ரூபவதி; நற்குணங்கள் பல அவளிடம் உண்டு; ஆனால் ஒரே ஒரு துர்க்குணம் மாத்திரம் இருக்கிறது. வெகு வாயாடி சுருக்கிச் சொல்லவேண்டுமானால், அவள் பேர்போன நீலி.

பொன்னைக் குவியல் குவியலாகக் கொண்டுவந்து கொடுத்தால் கூட நான் அவளைக் கல்யாணஞ்செய்துகொள்ளேன்.

நா.—போதும், போதும், உமக்கு பணத்தினுடைய வல்லமை தெரியாதுபோலும்;—அவளுடைய தகப்பனார் யாரென்று சொல்லும். உடனே நான் போய் நிச்சயம் செய்துகொண்டு வந்துவிடுகிறேன். அவள் வையும் ஒவ்வொரு வசவும் கோடையிடிபோல விருந்தாலும் நான் அவளைச் சரிப்படுத்திவிடுகிறேன்.

பி.—அவள் தகப்பனார் பெயர் ரகுநாததேவர் சாந்தகுணம் அவரிடத்தில் தான் பிறந்தது என்னலாம்; வெகு நல்லவர்; அவருக்கு இப்படி ஒரு பெண் பிறந்தது; அவள் பெயர் கௌதமி தேவியாம். வம்புச்சண்டையில் வெகு கீர்த்தி பெற்றவள்.

நா.—அப்படியா? எனக்கு அவள் தகப்பனாரைத் தெரியுமே; அவளைத் தெரியாது, ரகுநாததேவரும் என் தகப்பனாரும் வெகு அந்நியோந்நிய சிநேகிதர்கள். நான் உடனே போய்க் காரியத்தை முடித்துக்கொண்டு வரவேண்டும்; நீயும் கூடவருகிறாயா? இல்லாதபோனால் நான் தனியாகவே போகிறேன்.

பொ.—அவரே போகட்டும்; அந்த அம்மாளுக்கு இவர்தான் ஏற்றவர்; அந்த அம்மாள் ஒருவசவு வைதால் இவர் ஒன்பது வசவு வைவார்; ஒருநாள் பழகியதும், இவரிடம் தனது சாமர்த்தியம் செல்லாதென்று தெரிந்து அந்த அம்மாள் அடங்கிப் போய்விடுவாள்; இவர் குணத்தை நான் நன்றாய் அறிவேன்.

பி.—இரும், நானும் கூடவருகிறேன், எனது உயிர் ரகுநாததேவர் கையில் அகப்பட்டுக்கொண்டு விழிக்கின்றது; என் காதலியாகிய அவர் இளைய பெண் வகீதேசுவரியை அவர் கன்னியா மாடத்தில் அடைத்து வைத்திருக்கிறார். மூத்தபெண் நீலி கௌதமிக்குக் கல்யாணம் ஆனபிறகுதான், இளையபெண் கல்யாணத்தைப்பற்றி யோஜிப்பாராம்; அதுவரையில் ஒருவரும் அவளிடம் போகக்கூடாதென்று திட்டம் செய்திருக்கின்றனர்.

பொ.—பேஷ்! நல்லபட்டம் கிடைத்திருக்கிறது, அந்தப் பெண்ணுக்கு! நீலி கௌதமியா?

பி.—நாராயணதேவரே! நான் உபாத்தியாயன் வேஷம்பூண்டு உம்முடன் வருகிறேன். தயவு செய்து அழைத்துப்போய், ரகுநாததேவர் முன்னர் விடும்; நான் ஸங்கீத வித்வானென்று சொல்லிக் கொண்டு வகீதேசுவரிக்குப் பாட்டு சொல்லிக் கொடுத்துக்கொண்டு அவளை நயப்படுத்திவிடுகின்றேன்.

பொ.—(தனிமையில்) போக்கிரித்தன யோஜனையா செய்கிறீர்கள்? கிழவனை ஏமாற்றவா பார்க்கிறீர்கள்? (வெளியாய்) இதோ யாரோ வருகிறார்களே!

பொன்னம்பலதேவரும், மாறுவேஷம்பூண்ட விஜயராகவ உடையாரும் பிரவேசித்தல்.

பி.—பேசாதே, பொன்னு! இதோ வருபவன் எனது போட்டிக்காரன். நாராயணதேவரே, நாம் சற்று மறைந்திருப்போம்;

(அவர்கள் மறைவில்போகின்றனர்)

பொ.—பேஷ்! அந்தத் துண்டுக் கடிதத்தைப் படித்துப் பார்த்துவிட்டேன்; இதைக்கேளும்; நீர் அவளுக்குச் சொல்லிக்கொடுப்பவைகள் எல்லாம் இன்பச்சுவை பற்றியதாகவே இருக்கட்டும்; தெரிந்ததா; ரகுநாததேவர் கொடுக்கும் சம்பளத்துக்குமேல், நான் உமக்கு விசேஷ வெகுமானம் செய்கிறேன்; என்ன சொல்லிக்கொடுப்பீர் அவளுக்கு?

வி.—என்ன சொல்லிக்கொடுத்தாலும் உமது புகழையே அடிக்கடி சொல்லுகிறேன்; நீங்கள் நேராகவே இருந்தால் எவ்வளவு பேசுவீர்களோ அதற்கு அதிகமாகவே உங்களுக்காகப் பேசுகிறேன், சந்தேகப்படவேண்டாம்; எனக்கு எல்லாம் தெரியும்.

பொ.—நீர் வெகு கெட்டிக்காரர்; நான் உம்மை மறந்துவிடமாட்டேன்.

பி.—(வெளியில் வந்து) என்ன, பொன்னம்பலதேவரே! சௌக்கியமா? என்ன விசேஷம்?

பொ.—நல்ல சமயத்தில் வந்தீர்கள், நான் எங்கே போகிறேன் தெரியுமா? ரகுநாத தேவரிடத்துக்கு வகீதேசுவரிக்கு ஒரு உபாத்தியாயனைத் தேடிக்கொடுப்பதாகச் சொல்லிவிட்டு வந்தேனல்லவா, இவர் நல்லவேளையாய் அகப்பட்டார்; அநேக சாஸ்திரம் படித்தவர்; வெகு கெட்டிக்காரர் இவரை அழைத்துக்கொண்டுபோகிறேன்.

பி.—நல்லது என்னையே காதலிக்கிற வசிஷ்டதேசுவரிக்கு ஒரு சங்கீத உபாத்தியாயனைத் தேடிக் கொடுப்பதாக எனது நண்பர் ஒருவர் வாக்களித்திருக்கிறார்; ஆதலால் செய்யவேண்டிய கடமையில் நான் பின் தீங்கிப்போய்விடவில்லை.

போ.—என்னையே காதலிக்கிறாள்.—வேண்டுமானால் நிரூபிக்கிறேன்.

பி.—நாம் சண்டை போடுவதை நிறுத்திவிடுவோம், இதைக் கேளும்; நம்மிருவருடைய அனுகூலத்துக்கும் இடமுண்டு; அதிருஷ்டவசமாய் இந்தப் பிரபுவை நான் சந்தித்தேன். இவர் கௌதமியைக் கல்யாணம் பண்ணிக்கொள்வதாகச் சொல்லுகிறார், விசேஷ பணம் கொடுப்பதாகவிருந்தால்.

போ.—ரொம்பவும் சந்தோஷம் அப்படி காரியம் கைகூடினால் நல்லது தான்.—ஆனால் அவளுடைய துர்க்குணங்களை யெல்லாம் அவருக்கு நீர் சொல்லவில்லையோ?

நா.—அவள் வெது வாயாடியென்று தெரியும் அவ்வளவு மாத்திரம் இருந்தால், குற்றமில்லை காரிய முடிவைப் பற்றிப் பேசுங்கள்.

போ.—குற்றமில்லை யென்று சொல்லுகிறீர்! நீங்கள் இருப்பது எந்தவூர்?

நா.—நான் இருப்பது உறையூர், என் தகப்பனார் ஸ்ரீராமலிங்க தேவர். அவர் இறந்து போய்விட்டார். ஏதோ கொஞ்சம் ஆஸ்தியுமிருக்கிறது. சுகமாகக் காலம் கழிக்கலாமென்றிருக்கிறேன்.

போ.—வெகு சுகமாகக் காலங்கழிப்பதற்கு இந்தப் பெண் ஏற்றவளல்லள். இது கருங்குரங்கல்லவா? பேய், பேயிலும் ராக்ஷசப் பேய்.

நா.—குற்றமில்லை யென்று தான் முன்னமேயே சொல்லிவிட்டேனே! ஏதோ சற்று உரத்துப் பேசினால் காது கெட்டுப்போய் விடுமோ? சிங்க கர்ச்சனையை நான் கேட்டதில்லையா? வெகு பயங்கரமாய் அலைமோதும் கடலோசையைக் கேட்டதில்லையா? கோடையிடிக்கு நான் பயந்து போனேனா? ஏதோ ஒரு பெண்பிள்ளையின் வாய்க்கு இவ்வளவு பயப்படுகிறீர்களே! ஆட்டுக்குட்டியைக்கண்டு சிங்கம் பயப்படுமோ? போங்கள் போங்கள்.

போ.—பிரதாபருத்திரரே! இவர் நமக்கு அநுகூலம் செய்வாரென்று தோன்றுகிறது. நம்முடைய நற்காலந்தான் இவர் இங்கு வந்தது.

பி.—அதனால் இவருக்கு நேரும் கல்யாண விஷயச் செலவில் நாம் பாதி ஒத்துக்கொடுக்கவேண்டும் உமக்கு இஷ்டமா?

போ.—அவளை யிவர் கல்யாணம் செய்துகொள்ளும் பக்ஷத்தில் முழுச் செலவையும் நாம் ஒத்துக் கொண்டு விடுவோமே.

போ.—பேஷ்! நல்லதாட்டுச் சாப்பாடு கிடைக்கும் வயிறுநிறைத்தின்று தூங்கலாம்.

திவ்ய வஸ்திர தாரியாய் சுப்பராயன் வருதல். கேசவன் உடன் வருகிறான்

சு.—பிரபுக்களே! உங்களுக்கு வந்தனம். ரகுநாத தேவருடைய வீட்டுக்குப் போகும் வழியெது? கொஞ்சம் சொல்லுங்கள்.

கே.—அழகான இரண்டு பெண் இருக்கிறார்களே அந்த வீட்டுக்காரர் தானே?

சு.—ஆமாம், அவர் தாம்.

போ.—நீங்கள் அங்கே என்ன காரியமாகப்போகிறீர்கள்?

பி.—ஏதாவது பெண்பேசும் விஷயமாய்ப் போகிறீர்களா?

சு.—ஏன் அப்படியிருந்தால் போகக் கூடாதோ?

போ.—கூடாதென்ன? தாராளமாய்ப் போகலாம். ஆனால் காரியம் கைகூடாதென்று தெரியும்.

சு.—ஏன்? விளங்கச் சொல்லுங்கள்.

போ.—ஏற்கனவே என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்வதாக அவருடைய இளைய பெண் எனக்கு வாக்குக் கொடுத்து விட்டாள்.

பி.—எனக்கும் வாக்குக் கொடுத்திருக்கிறாள், அவள்.

சு.—ஆத்திரப்படாதேயுங்கள்; ரகுநாத தேவர் பெரிய பிரபு. எனது தகப்பனாரும் அவரும் வெகு நாளைய நண்பர்கள்; அவருடைய பெண் அழகாகவிருந்தால் அநேகர் உனக்கு எனக்குஎன்று வருவர்கள் முன்னாளில் ராஜகுமாரத்திகளுக்கெல்லாம் சுயம் வரம் நடந்ததென்றும் அப்போது அநேகர் வருவாரென்றும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோமே உங்கள் இருவருடனும் விஜயராகவ உடையாராகிய நானும் ஒருவனாக வருகிறேனே,

வி.—(மனதில்) பேஷ்! சுப்பாராயா! நன்ருய்ப் பேசுகிருய்.

பி.—இவ்வளவு பேசுகிறீரே நீர் எப்போதாவது ரகுநாத தேவரின் குமாரத்தியைப் பார்த்ததுண்டா?

சு.—இல்லை ஐயா; ஆனுல்அவருக்கு இரண்டு பெண்கள் உண்டென்றுகேள்வி. மூத்தவள் வெகுவாயாடியென்றும் இளையவள் வெகு செளந்தர்யமுள்ள குணவதியென்றும் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

நா.—மூத்தவள் என்னைச் சேர்ந்தவள் அவளை விலக்கிப்பேசுங்கள். அவளுக்குக் கல்யாணம் ஆனபிறகுதான் இளையவளுக்கு ஆகுமாம்.

சு.—அப்படியானுல் நீர்தாம் முதலில் வழிகாட்டவேண்டும்போலிருக்கிறது. இதில் நீர் ஜயமடைந்தால் எங்கள் மூவரில் அதிருஷ்டமுடையவன் உமக்கு மிகுதியும் கடமைப் பட்டவனுகவிருப்பான்.

பி.—நீர் பேசுவதெல்லாம் சரிதான் நீரும் கல்யாண புருஷரில் ஒருவராக வரும் பக்ஷத்தில் இவருக்கு நேரும் செலவில் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்; நாங்கள் இருவரும் அப்படி ஒத்துக்கொண்டிருக்கிறேம்; அவரில்லாத போனுல் நமது காரியம் கைகூடாதல்லவா?

சு.—சரி! அப்படியே செய்கிறேன். இதற்கு அடையாளமாக, நாளைக்காலையில் நீங்கள் எல்லோரும் எனது விடுதிக்கு வந்து விடுங்கள். ஒரு விருந்தொன்று செய்யப் போகிறேன். நியாயஸ்தலத்தில் வழக்கை நடத்தும்போது இரண்டுகட்சியின் வக்கீல்களும் பிரமாதமாகச் சண்டைபோட்டுக்கொண்டாலும், வழக்குமுடிந்ததும் அன்னியோன்னியமாய்க் கைகோர்த்துக் கொண்டு போவார்களல்லவா? அதுபோல நாமும் கல்யாணவிஷயமாய் விவாதப்பட்டாலும், உண்பதிலும், குடிப்பதிலும், சிநேகிதர்களாக இருப்போம்.

பொன்னன் } நம்முடைய அதிருஷ்டம்தான், நல்ல
கேசவன் } சாப்பாடு கிடைக்கும்.

பி,—இது நல்ல ஏற்பாடுதான்; அப்படியே யாகட்டும். நாராயண தேவரே! என்னை மறந்து போய்விடாதேயும்.

(எல்லோரும் போதல்)

## சிறுவர்க்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

---

போலிபக்தி.—ஒரு ஊரில் ஓர் பிராம்மணன் இருந்தான். அவன் தினம்தோறும் கோவிலுக்குப்போவது வழக்கம். அங்குசென்று வெகு நாழிகை கடவுள் ஸந்நிதானத்தில் நின்று கொண்டு ‘பரம்பொருளே! என்பேரில் கிருபை கூர்ந்து என்னை உமது பாதாரவிந்தத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும், என்று தழதழத்த குரலோடு ஆனந்தபாஷ்பம் ஆருகப்பெருக தினந்தோறும் அவன் பிரார்த்திப்பது வழக்கம். கோவிலுக்கு வந்தவர்கள் எல்லோரும் போனபின்புகூட வெகுநாழிகை அங்கேயே நின்றுகொண்டு அவன் கடவுளை பிரார்த்தித்துக்கொண்டிருப்பது வழக்கம். அவன் மனதில் தான் ஒருபெரிய மஹான் என்றும் தனக்கு நாரதாதி பக்தசிரோமணிகள் கூட நிகர் அல்ல என்றும் எண்ணங்கள் தோன்ற கர்வம் அதிகரித்துக்கொண்டே வந்தது. அவன் வெகுநாழிகை கோயிலில் தினம் நின்றுவிடுவதால் அர்ச்சகருக்கு கோயிலை சீக்கிரம் அடைத்துக்கொண்டு வீடுபோய்ச்சேரப் பெருந்தடையாகயிருந்ததாம். மேலும் அவருக்கு அவன்பிரார்த்தனைகள்யாவும் வீண்ஜாலம்மனப்பூர்வமல்ல என்றும், வழக்கத்தின்பேரில் இவன் இவ்வாறு செய்கிறுனென்றும், ஆகையால் அந்த வழக்கத்தைகூடிய சீக்கிரத்தில் நிறுத்தி தாம் ஸுகம்பெறவேண்டும்என்றும் பட்டது. ஒருநாள் அந்த கர்வம்பிடித்தபிராம்மணன் கடவுள் ஸந்நிதானத்தில் துதிசெய்யத் தொடங்கின உடன் ஒருவரும் இல்லாத ஸமயம் பார்த்து அர்ச்சகர் கடவுள் விக்கிரகத்தின் பின்னே ஒளிந்து கொண்டு அமானுஷ்யமான குரலால் ‘அடே கிழவா! என்னிடம் வா. நான் உன்னை இப்பொழுதே என் பாதாரவிந்தங்களில் சேர்த்துக்கொள்ளுகிறேன். பயப்படாதே சீக்கிரம் வா!’ என்று அழைத்தார். பாசாங்குக்காரப் பிராம்மணனுக்கு கடவுளே பேசுவதாகத் தோன்ற அந்த ஸமயத்தில் பாழும் கடவுள் எங்கே தன்னைப்பிடித்து விழுங்கி விடுமோ என்றபயம் உண்டாயிற்று. அன்று முதல் அவன் கோயிலுள் வாராததோடுநிற்கவில்லை, வீட்டிலும் எங்கே அந்தக் கடவுள் தன்னைப் பிடித்துக் கொண்டு போய்விடுமோ என்ற பயத்தால் தனி

தன்னை வெறுத்தலைக்காட்டிலும் பெரிய செயல் ஒன்றுமில்லை. இது எல்லாராலும் சரியென ஒப்பப்பட்டது. பதிவிரதையும் தன்னை வெறுத்து தனது உடல், பொருள், ஆவி மூன்றும் தன் கணவனுக்கே அர்ப்பணஞ்செய்வதால்தான் பெருமை அடைகிறாள். அவளே பெரியவள்.

* * *

வானம்பார்த்து நடப்போன் பள்ளத்தில் விழுவான். கர்வம் கேடு விளைவிக்கும். வணக்கம்வேண்டும். இது எல்லார்க்கும் புத்தி, பதிவிரதைக்கும் அப்படியே. கர்வமென்பது லவலேசம் வந்தால் பாதிவிரத்யம் பங்கம் ஆய்விடும். கர்வமில்லாதவளே கணவனுக்கு தகுந்த மனைவி ஆகிறாள்.

* * *

'எதிர்மொழி விளம்பேல்' என்றாள் ஔவை. ஏன்? தெரியுமோ? எதிர் வாக்குவாதம்செய்யும் பெண் இரண்டு விதத்திலும் கேடு அடைகிறாள். தன்னையும் கெடுத்துக்கொள்ளுகிறாள். தான் பிறந்த வீட்டின் பெயரையும் கெடுக்கிறாள். தான் கெட்டாலும் போதாது என்று தன்னைச் சேர்ந்தாரையும் கெடுக்கிறாள். குலத்தைக் கெடுக்குங் கோடரிக்காம்பு வேறு வேண்டுமோ?

* * *

படியாதவன் சூரியனைப் பார்த்தால் ஓர் சிறிய தட்டைப்போலிருக்கிறதென்கிறான்: படித்தவன் அது அளவிடமுடியாமல் இப் பூவுலகைக் காட்டிலும் அநேகமாயிர மடங்கு பெரியதென்றறிகிறான்.— சரியல்லாத மனைவியும் தன் கணவன் ஓர் வெறும் உபயோகமற்ற மனிதன் என்று எண்ணுகிறாள், ஆனால் சரியான பத்நியோ தன் கணவன் சாதாரண உருவல்லவென்றும், அவன் தெய்வீகத் தன்மைப் பெற்றவன் என்றும் அறிகிறாள். எல்லாப் பெண்களும் சரியான பத்நியாகக் காண்பதெக்காலமோ!

* * *

"பிரிந்தவர் கூடினால் பேசல்வேண்டுமோ" என்றார் கம்பர், இது சீதாப்பிராட்டியார் மிதிலாபுரியில் இராமர் வரக் கண்டபொழுது சொல்லப்படுகிறது. பிரம்மத்தினின்று இரண்டு ரூபமாய்க் கிளம்பிவந்த இவ்விருவரும் பார்த்த உடன் உள்ளங்கலந்து ஒன்றானார், என்பது கம்பர் கருத்து. ஒரு பெண்ணும் எப்பொழுது ஒருவனை வரித்து மணக்கின்றாளோ அப்பொழுதே அவனிடத்து ஐக்கியமாக வேண்டும்; இது அத்யாவசியகம்.

* * *

இக்காயத்தின்மேல் ஆசைவிட்டவனே பெரியவன். சதையினிடத்துக் கொண்ட அன்பு நீங்கினாலொழிய பெருமை வராது. பதிவிரதைக்கும் அப்படியே. இதைஅறிந்து நடப்பாராக.

* * *

கோபங் குடிகெடுக்கும். கோபம் அரைப் பைத்தியம். கோபத்தின் கைக்குள் விழுந்தவர் சித்தங்கலங்கி, அக்கலக்கத்தில் தமது மெய்ம்மறந்து, தகாதவை செய்து, தமக்கே கெடுதி சம்பாதித்துக் கொள்ளுகிறார். பெண்கள் கோபங்கொள்வது பல விதத்திலுமவர்க்குக் கேடு. அதை விட்டுவிடுவதே அவர்க்கு முதல் வேலை ஆகிறது.

* * *

தாயைப் பார்த்துப் பெண்ணைக் கொள்ளும், பாலைப்பார்த்துப் பசுவைக் கொள்ளும் என்பது பழமொழி. பெண் சரியாய் நடக்காவிட்டால் தாயைப் போல் இருக்கிறாள் என்பார். அவ்வார்த்தை வரும்படி வைத்துக் கொள்வானேன்? தாய்வீட்டு வளர்க்கை சரியாய் இல்லை என்று சொல்வதில் கோபம் வருவானேன். பெண்பிள்ளைகளை வளர்க்கும்போது, மேல் அவள் கணவன் வீட்டில் இருப்பதற்குத் தக்கவாறு வளர்க்கவேண்டும். இது தாய்க்கு முதல்வேலை.

* * *

"மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்," என்றாள் ஔவை. மூத்தோர்சொல் வார்த்தை அமிருதம். ஆகையால் பெண்ணும் தனக்குத் தோன்றியவழியில் செல்லாது தன் கணவன் விரும்பும்வழியில் நடக்கவேண்டியது. இதுதான் அவளுக்குப் பெருமையை உண்டாக்குகிறது.

* * *

"கோயிலில்லா ஊரில் குடி இருக்கவேண்டாம்" என்பது ஒரு மொழி. மனைவிக்கு தன் நாயகன்வீடே கோயில். அவன் வீடில்லாத இடங்களில், அவள் இருப்பது தகுதியன்று. பழிக்கு இடமாகும்.

* * *

"சோம்பித்திரியேல்." அதாவது வேலை செய்யாமலிருக்கக்கூடாது. வேலை செய்தும் தனது நன்மைப்பொருட்டு செய்யவேண்டும். மனைவிக்கு நன்மை தன் நாயகனுக்குத் தக்கவாறு நடப்பதுதான். அவனுக்காக நடப்பதே அவளுக்கு மூல தர்மம் ஆகிறது.

* * *

தாமரை மலரானது சூரியனைக் கண்டதும் முகமலர்ந்து எதிர்கொண்டு சந்தோஷிக்கிறது. சூரியன் மேற்கடலில் விழுந்தால் முகஞ் சிறுத்து துன்பமடைகிறது. நாயகி லக்ஷணமுமிதுதான். கணவனைக் கண்டால் சந்தோஷமு மானந்தமும் அடைந்து, அவனைப் பிரிந்தகாலத்தில் வாட்டமடைந்து ஒன்றுந் தோன்றாது திகைத்திருப்பது அவள் லக்ஷணமாகும்.

* * *

சொல்லுவது எல்லார்க்கும் ஸுலபம்; சொல்லிய மாதிரி நடப்பது கஷ்டம். தமது குணத்தை எல்லாம் வார்த்தையால் காட்டாது செய்கையால்தான் காட்டவேண்டும். மனைவியும் தன் கணவனிடத்து "எனக்காசை இல்லையா" வென்று சொல்வதில் பிரயோஜனமில்லை. அதை செய்கையால் காட்டுவது தான் அவள் வேலை; அப்படியே நடப்பாளாக.

வா. சேஷகிரிசாஸ்திரி.

# விசேஷ வர்த்தமானங்கள்

## GENERAL NEWS

ஒரு பயங்கரமான பெரிய சிலந்தி:—இலங்கைத் தீவில் சில மலைப்பிரதேசங்களில் சற்றேறக்குறைய 6 அங்குல நீளமுள்ள கோரமான சிலந்திகள் காணப்படுகின்றனவாம். அவைகளின் முதுகு கருப்பு ரோமங்களால் மூடப்பட்ட அடிப்பாகம் மஞ்சள் அல்லது சிவப்பாகவாவது இருக்கின்றதாம். இது உண்டாக்கும் வலை மஞ்சள் பட்டுப்போல இருக்கின்றதாம். அதன் மத்தியில் இருக்கும் சிறிய வலை சற்றேறக்குறைய 5 அடி குறுக்களவுள்ளதாம். இதைத்தாங்க எல்லாப் பக்கங்களிலும் காணப்படும் குறுக்கு நூல்கள் சற்றேறக் குறைய 10 அல்லது 12 அடி நீளமாம். இந்தச் சிலந்தி அதிகமாக கடிப்பதில்லை. அதை யாராவது பிடிக்கமுயன்றால் அப்பொழுதுதான் கடிக்கும். அதன் வாய்க்கு பக்ஷிகளின் மூக்கிற்கு உள்ளபலம் உண்டு. அதன் வலைக்கு வானம்பாடியைப் போன்ற பக்ஷிகளையும், சிறுபல்லிகளையும் கட்டுப்படுத்த சக்தியுண்டு. ஏதாவது அதன்வலையில் வந்து விழுந்துவிட்டால் உடனே அதன் தலை கண் மூக்கு வாய் முதலியவைகளைத் தன் நூல்களால்கட்டி அதை பார்க்க வொட்டாமலும் மூச்சு விட வொட்டாமலும் அது செய்து, முடிவில் அதைக்கொன்று விடுகின்றதாம்.

* * *

கொலையாளிகளைக்கண்டு பிடிக்கும் விதம்:—கொலையாளிகள் கொலைத்தொழில் புரியுங்கால் தமது உடல் முதலியவற்றில் ரக்தக்கறை உண்டாக்கிக் கொள்ளாது செய்யமுடியாது. ஆகையால் இது வரையில் வரும் கொலைத் தகரார்களில் சந்தேகம் இருப்பவர்கள் கொலைநடந்தகாலத்தில் கட்டியிருந்த வஸ்திரங்களை எடுத்துவந்து அவைகளில் காணப்படும் கறைகள் மனுஷ்ய ரக்தத்தால் உண்டானவையா அல்லவா என்பதை அநேகவிதமாக பரிசோதிப்பது வழக்கம். இந்தப் பரிசோதனைக்கு பிராணவாயு மிகுந்த ஸஹாயமாக இருக்கிறது. பிராணவாயுதாரையை, பிகமங்கிய மனுஷ்ய ரக்தக் கறையின் மேல்விட்டால் உடனே அது சிவப்பாய் விடும். இதை அநேகம்தரம் வர்ண ஸம்பந்தமாகப் படம்பிடித்தால் இது உடனே ஸ்வபாவ வர்ணத்தோடு வெளியாகுமாம்.

ஸூர்யவெளிச்சம் மனிதன் தேக மனோநிலைகளைக் காட்டும்:—பிரான்ஸ்தேசத்திய வைத்தியர் ஒருவர் மனிதரது குணகுணங்களை அவர் ஸூர்ய வெளிச்சத்தில் இருக்க இச்சிக்கிறாரா இல்லையா என்பதை அறிந்து நாம் தீர்மானமாகக் கண்டுபிடிக்கலாம் என்று வெளியிட்டிருக்கிறார். மனிதர்களது தேகம் மனது இவைகளின் ஆரோக்கியத்திற்கும் ஸூர்ய வெளிச்சத்திற்கும் அதிக ஒற்றுமை உண்டு. ஆதலால் முன்சொன்ன வைத்தியர் மனிதர்களை நிழலைவிரும்புபவர், வெயிலை விரும்புபவர் என்று இரு திறத்தாராகப் பிரித்திருக்கிறார். நிழலை அதிகமாக விரும்புபவர்களுக்கு சஞ்சல மனது, குடி, அன்னத்துவேஷம் முதலிய நோய்கள் காணப்படுகின்றன. காலைவேளையில் இவ்விருதிறத்தாரது தாரதம்யத்தை நன்றாகக் காணலாம். காலையில் ஸூர்யோதயமாவதற்குள் எழுந்து ஸூர்ய வெளிச்சத்தில் இருக்கவேண்டும் என்ற ஆவல் நல்ல ஆரோக்யமான தேகத்தையும், சுத்தமனதையும் உடையவர்களிடத்தில் காணப்படும். அவர்களுக்கே ஏதாவது வியாதி வந்துவிட்டால் கதவைச் சாத்திக்கொண்டு வெகுநாழிகை தூங்கவேண்டும் என்ற எண்ணம் காலைநேரங்களில் உண்டாய்விடுகின்றது. பலஹீனர்கள் அல்லது அசுத்த மனதுடையவர்கள் ஆகிய இவர்களது குழந்தைகளிடத்தில் காலையில் ஸூர்யவெளிச்சத்தில் நிற்கவேண்டும் என்ற ஆவல் காணப்படுகிறதே இல்லை. நல்ல ஸௌக்கியமும் குணமும் உடையவர்களுக்கு காலையில் ஸூர்ய வெளிச்சத்தைவிட்டுப் போய்விட்டால் ஏதோ ஓர்விதமான துக்கம் தோன்றுகிறதாம். நிழலில் போவதால் உண்டான குளிர்ச்சியால் அவர்களுக்கு இம்மாதிரி உண்டாயிருக்கலாம் என்று சொல்ல இடமில்லை, ஏனெனில் அவ்வாறு குளிர் தட்டாதிருப்பதற்கு வேண்டியவைகளை அந்த ஸமயத்திலேயே தயாராக்கிவைத்திருந்தது. ஆதலால் அவர்கள் ஸூர்ய வெளிச்சத்திலிருந்து அப்புறம் போனதும் அவர்களுக்கு ஏதோ மனம் தளர்ந்ததுபோல ஒரு விதமான அனுபவம் அவசியம் உண்டாயிருக்கும் என்று தோற்றுகிறது. இதுவும் அல்லாமல் சிறைச்சாலைகளிலும் இவ்விஷயத்தில் பரிசோதனைகள் நடந்தன. கட்டுக்கடங்கும் குணமில்லாக் கொடியவர்களை ஸூர்யவெளிச்சத்தில் வேலைசெய்ய விட்டால் அவர் கொடுமை அதிகரித்ததென்றும், அவர்களை உள்ளே அடைத்து நிழலில் வேலைவாங்கினால் அவர் நன்றாக அடங்கி வேலைசெய்தார்கள் என்றும், தாமே ஸ்வபாவமாக கொடியவர்களில்

லாது சேர்க்கையால் கெட்டவர்களை ஸூர்யவெளிச்சம் படும்படியான இடங்களில் வேலைவாங்கினால் அவர்கள் கூடிய சீக்கிரத்தில் நல்லவர்களானார்கள் என்றும் தெரியவருகிறது. குற்றவாளிச் சிறுவர்களைச் சீர்திருத்தும் சிறைச்சாலைப் பள்ளிக்கூடங்கள் சிலவற்றில் பிள்ளைகளுடைய குணத்தை அவர்களுக்கு வெயிலில் இருக்க உண்டாகும் ஆவலிலிருந்து ஒருவாறு கண்டுபிடிக்கக்கூடும் என்று தெரியவருகிறது. கெட்டவர்களுக்கு வெயிலால் பயனில்லை என்பதும், ஸாதாரணமானவர்களுக்கு வெயிலால் நடத்தை திருந்துகிறதென்பதும் அநேகப் பரிசோதனைகளால் வெளியாகின்றது. இவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ள விஷயங்கள் யாவும் ஸமசீதோஷ்ணமுடைய பிரதேசங்களில் காணப்பட்டுள்ள விஷயங்கள்.

⁂

வியாபாரிகளின் பொறாமை.—வியாபாரிகளுள் நன்றாக வியாபாரஞ்செய்து லாபமடைந்தவனைக் கண்டால் மிகுந்த பொறாமை. மற்றை வியாபாரிகளின் குடியைக் கெடுத்துவிட்டே அவ்வாறு சிறப்படைந்திருக்கிற பாபி என்று மற்றவர்கள் அவனைப் பழிப்பது வழக்கம். இது வியாபாரிகளுள் உள்ள ஒரு கெட்ட வழக்கம்.

⁂

ஒழுங்கான சேர்க்கை.-இக்காலத்திய வியாபாரங்களுக்கு எல்லாம் வியாபார விருத்தியால் பரஸ்பரம் நன்மை அடைதற்பொருட்டு அநேகர்சேரும் ஒழுங்கான சேர்க்கையே முக்கிய லக்ஷணம். இது முற்காலத்திய தனி வியாபாரத்தை மிஞ்சி எங்கும் இக்காலத்தில் வெளிவருகின்றது. இப்பொழுது சிறுகடைகள் வைத்துக்கொண்டிருக்கும் பிரித்து வியாபாரம் செய்யும் ஒவ்வொருவனும், சேர்க்கையாய் வியாபாரம் செய்யும் நாணயப்பழக்கம் அதிகமுள்ள ஸங்கத்தார் வியாபாரத்தால் அழியாதிருப்பதற்கு தனது அயலானோடு சேர்ந்து பணம்விருத்தி செய்துகொண்டே வியாபாரஞ் செய்யவேண்டும். இல்லாவிடில் இக்காலத்திய வியாபாரவேகத்தை தனிவியாபாரிகளால் தாங்கமுடியாது.

⁂

வியாபார விநத்தி.—இதற்கு முதல் அதிகமாக இருந்தாலும் போதாது. வியாபாரத்தின் நோக்கம் இன்னது என்பதை ஐயந்திரிபற அறிந்துகொண்டாலும் போதாது. வியாபாரம் விருத்தியாவதற்கு அந்த நடத்தும் ஒவ்வொரு விஷயத்திலும் ஒழுங்கு வேண்டும். இதுவே வியாபாரத்தில் மிகுந்த லாபம் வருவதற்கு முக்கிய காரணம்.

வியாபாரங்களில் வரும் ஆபத்துகள்.-நாம் எந்த விஷயத்தில் வியாபாரத்திற்காக இறங்குகிறோமோ அது நெடுநாள் நீடித்து ஜனங்களால் உபயோகமுள்ளது எனக்கொள்ளப்படாத விஷயங்களைப் பற்றியதாக இருந்து விட்டாலும் விடலாம். ஆரம்பத்தில் அவ்வழியில் கொஞ்சம் லாபம் அடைந்தாலும் அடையலாம், ஆனால் அது கூடிய சீக்கிரத்தில் பயனற்றதாகப்போய் விடலாம். இம்மாதிரி முதலில் சீர்காலோசனை செய்யாது இறங்குவது வியாபாரங்களில் வரும் ஆபத்துக்களுக்கு முக்கியகாரணம். இப்பொழுது சொன்ன விஷயம் வஸ்துக்கள் உண்டாக்க வியாபாரம் செய்யும் வகையில் அதிகமாகக் கவனிக்க வேண்டியது. பிற்காலத்தில் நாம் இப்பொழுது தொடங்கும் விஷயம் இவ்வாறு விருத்தியாகும் என்ற முன் யோசனை ஒவ்வொரு வியாபாரிக்கு இருக்க வேண்டும். மேலும் அவன் தனக்குத் தகுந்த வியாபாரத்தில் இறங்கவேண்டும். அது தன்னால் நன்றாகச்செய்து முடிக்கத்தக்கதாக இருத்தல்வேண்டும். தன்முன் காணப்படும் விஷயங்களை நன்றாக உணர்ந்து அவைகள் மூலமாக ஒருவன் தீர்வித நிச்சயத்திற்கு வரவேண்டும். இந்த தீர்மானம் ஸரியாய் இராவிட்டால் வியாபாரத்திற்கு அபாயம் உண்டாகும். இது ஸரியாக வாய்ந்துவிட்டால் அவன் நல்லநிலைக்கு வருவான். மேலும் எந்த விருத்தி விஷயத்திலும் வந்ததுபோதும் என்று திருப்தி அடைவது எவ்வளவு அபாயகரமானதோ அவ்வளவு அந்த திருப்தி வியாபார விஷயத்திலும் அபாயகரமானது.

⁂

விடாமுயற்சி.—எவ்விஷயத்திலும் ஸித்திபெறுவதற்கு இது அவசியம்வேண்டும். வியாபாரத்திற்கும் அவ்வாறே. வெப்ஸ்டர் பெரிய ஆங்கில அகராதி எழுதிமுடிக்க 36-வருஷம் விடாது உழைத்தார். ஸ்டீபென்ஸன் ஆதியில் ரயிலை ஒரு ஒழுங்குப்படுத்த 15-வருஷம் விடாது உழைத்தார். எடிஸன் என்பவர் தமது தூரஸம்பாஷணை யந்திரத்தில் ஸகாரசப்தம் நன்றாக உண்டாவதற்கு அநேக மாதங்கள் நாள் ஒன்றிற்கு 19 மணி விழுக்காடு உழைத்தாராம். இவைகளே விடாமுயற்சியால் விளையும் பயனுக்கு ஸாக்ஷி.

⁂

ஜரிகை.—நல்ல ஜரிகைகளை வெள்ளைக் காகிதத்தில் மடித்து கொஞ்சகாலம் வைத்திருக்கலாகாது. அது ஸூர்ய வெளிச்சத்தால் சீக்கிரம் மங்கல்வர்ணமாகிவிடும். அதை அவ்வாறு கெடாது, வைத்திருக்கவேண்டுமாகில் இலேசான நீலக்காகிதத்தில் மடித்து வைத்திருக்கவேண்டும்.

# இந்துலேகை

(ஒரு மலையாள நாவல்)

## இரண்டாவது அத்தியாயம்

(96 - வது பக்கத்தின் தொடர்ச்சி.)

இந்துலேகை அணியும் ஆபரணங்கள் சாதாரணமாய் வெகு சொற்பமாகவே யிருக்கும். அவளுடைய அம்மான் கொச்சு கிருஷ்ணமேனவனும் பாட்டனாரும் கணக்கு வழக்கில்லாமல் அவளுக்குப் பண்ணிப்போட்ட நகைகளும், அவளுடைய தாயாருக்கு அவளுடைய பிதா பண்ணிப்போட்டவைகளில் அவளுடைய பாகத்துக்கு வந்த நகைகளும் சேர்ந்து அவளிடத்தில் திரண்டிருந்த ஆபரணங்களின் சேகரம் அளவற்றதா யிருந்தாலும், இந்துலேகையானவள் அவ்வாபரணங்களில் அதிக பிரியம் வைக்கவில்லை. ஆகவே பண்டிகை நாட்களிலும் உற்சவகாலத்திலும் விசேஷவிதியாய் ஸர்வாபரணங்களையும் அணியவேண்டிய ஆவசியகம் ஏற்படும்போது, தன் தாயாராவது பாட்டனாராவது நிர்ப்பந்தமாய்க் கட்டாயப்படுத்தினாலொழிய அவள் அவ்வாபரணங்களை யணியமாட்டாள். காதில் தோடும், கழுத்தினடுவில் தொங்கிக்கொண்டிருக்கும் ஒரு தங்க சரட்டின்மேல் ஒரு சிறிய பதக்கமும் அதன்கீழே ஒரு அகன்ற பொன்சரட்டின்மேல் நல்ல விலையுள்ள வைரமும் பச்சையும் கெம்பும் பதித்த பதக்கமும், கைகளில் தஞ்சாவூரில் கிழக்குதேச வழக்கப்படி செய்யப்பட்ட காப்பும், கைவிரல்களில் சில மோதிரங்களும் ஆகிய இவைகளே அவள் சாதாரணமாய் அணியும் ஆபரணங்கள். ஆனால் ஆபரணங்களில் அவளுக்கு அவ்வளவு அதிகமாய்ப் பிரீதி இல்லாமற்போனாலும், வஸ்திராலங்கார விஷயத்தில் அவள் அதிக அக்கறையாயிருந்தாள். மிகவும் மெல்லிய இழையுள்ளவையாய்த் தங்கசரிகைக் கறைபோட்ட வஸ்திரங்களை தினந்தோறும் வெளுக்கப்பட்டுத் தான் காலை மாலைகளில் ஸ்நாநஞ் செய்தவுடன் உடுத்திக்கொள்வதற்குத் தயாராயிருக்க வேண்டுமென்று திட்டஞ்செய்வாள். அவள் மார்பிலும் தோளிலும் பொன் பூபோட்ட துப்பட்டாவை எப்போதும் தரித்திருப்பாள். இவ்வளவுதான் அவளுக்கு வழக்கமாயுள்ள உடுப்பு.

இந்துலேகை என்னும் பெயரானது, இந்தக் கதையில்வரும் இதர ஸ்திரீகளின் பெயர்களை நோக்கும்போது, சிறிது பொருத்தமற்றதாகத் தோற்றுகிறதென்றும் இப்படிப்பட்ட பெயரை நாயர் குடும்பத்து ஸ்திரீகளுக்கு ஒருபோதும் வைப்பதில்லையென்றும் அப்படி ஒருவேளை வைத்தாலும் அது வெகு அபூர்வமென்றும் இக்கதையை வாசிக்கும் நண்பர்கள் எண்ணி ஆச்சரியப்படக் கூடும். ஆனால் இப்பெயரிட்டழைத்ததற்கு வாஸ்தவத்தில் காரணபூதமானவர் கொச்சு கிருஷ்ணமேனவனே. என் கதாநாயகிக்கு நாமகரணஞ் செய்யும்போது வைத்த பெயர் மாதவி என்பது. ஆனால் அவள் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் அழகில் வளர்ந்துவருவதைக் கண்டு கிருஷ்ணமேனவன் அவளுக்கு சந்திரரேகையென்று அர்த்தமுள்ள ‘இந்துலேகா’ என்று பெயரிட்டான். அதுமுதல் அப்பெயரே வழங்கத்தொடங்கியது. ஆனால் அவளை இந்தக் கதை தொடங்குங் காலத்தில் மாதவியென்று ஒருவன் மாத்திரமே அழைத்துவந்தான். அவன் மாதவனைத் தவிர வேறெவருமல்ல. இவ்வளவு அழகு வாய்ந்தவனும் ரஸிகனும் வித்வானும் ஸமர்த்தனும் தன் பெரியதகப்பன் மருமகனுமாகிய மாதவனுக்கும் இந்துலேகைக்கும் அந்யோந்ய ஸ்நேகமிருப்பது ஸகஜமேயென்று நான் சொல்லவேண்டியதில்லை யல்லவா? உண்மையில், இக்கதை தொடங்குங் காலத்தில், இவர்களுக்கு அந்யோந்யமாய் அந்தஃகரணவிவாகம் நடந்தேறிவிட்டது.

இந்துலேகையானவள் ரமணீயமும் மனோஹரமுமான சகலபதார்த்தங்களும் திரண்டுருண்டு அவதாரமெடுத்து வந்ததுபோல் அவ்வளவு அற்புதமாய் விளங்கியபடியால் அவளுடைய எண்ணத்துக்கும் இஷ்டத்துக்கும் சிறிதேனும் ஆக்ஷேபிக்கின்றவர் அவளுடைய பாட்டனார்வீட்டில் ஒருவருமில்லை. ஆனால் அவள் அந்தக் குடும்பத்திலே ஒரு மஹாராணிக்குரிய பதவியை இவ்வாறு வஹித்து வந்தபோதிலும் அவள் செய்யும் காரியங்களில் எதைப்பற்றியாவது அவளுடைய நடத்தையைப் பற்றியாவது ஒருவரும் எவ்வித் தோஷாரோபணமாயினுஞ்செய்து முணுமுணுத்ததில்லை.

இந்தக் கதை தொடங்குங் காலத்தில் இந்துலேகைக்கும் மாதவனுக்கும் பாஸ்பரம் அந்தஃகரண ஆத்மவிவாகம் நடந்தேறிவிட்டதென்று நான் குறிப்பாய்ச் சொன்னதிலிருந்து அவர்களுக்குள் பரஸ்பரமுள்ள அந்யோந்யத் தன்மை இவ்விதமானதென்று நன்றாய் விளங்குமோவென்று சந்தேகிக்கின்றேன்

இப்படிப்பட்ட மிருதுசபாவமுள்ள இவ்விருவரின் ஹிருதயங்களிலும் அந்யோந்ய அநுராகம்

உண்டாகாமலிருக்க முடியாதென்று என் வாசகர்கள் ஏற்கனவே ஊஹித்தறிந்திருக்கக்கூடும்; ஆனால் இவ்விஷயத்தைக் கேவலம் ஊஹித்தறியப்படும்படி விட்டுவிடுவதைவிட, மாதவனுடைய காதலின் உற்பத்தியையும் வளர்ச்சியையும் ஸ்பஷ்டமாயும் சுருக்கமாயும் எடுத்துரைப்பது நல்லதென்று தோற்றுகிறபடியால், சிறிது பூர்வகதா பிரசங்கஞ் செய்கின்றேன்.

இந்துலேகையின் கல்விப்பயிற்சி பூர்த்தியானபிறகு அவள் ஸ்வயமாகவே தன் யுக்தாயுக்தபுத்தியைச் செலுத்தி, தன்னைப் பாணிக்கிரஹணம் செய்யத் தகுதியுடையவர்களாய்ப் போட்டி போட்டுவரும் புமான்களுக்கிடையிலே அவளுக்கிஷ்டமானவனை அவளே கணவனாக வரித்தெடுக்க வேண்டுமென்றே அந்தப் பெருந்தகையான கிருஷ்ண மேனவன் எப்போதும் உத்தேசித்திருந்தார். ஆனால் அவர் இதைப்பற்றி அதிகமாய் யாரோடும் ஒன்றும் பேசினது கிடையாது. பெண்ணுக்குப் பத்து பதினொரு வயதானதுமுதல் விவேகிகளான பலரும் இதுவிஷயமாய்ப் பேஷ்காரின் மனதை யூறிய முயன்றும் முடியாமற்போய்விட்டது. அவர் இறந்துபோவதற்குச் சிலநாள் முன்பு ரஜாபெற்றுக்கொண்டு இந்துலேகையுடன்கூடத் தன் பிதாவைப் பார்க்க வந்திருந்தார். அப்போது பஞ்சுமேனவன் அவருடன், 'இந்துலேகைக்கு வயது 15-க்கு மேலாய்விட்டதே, சரியான நல்ல சம்பந்தமொன்று தேட வேண்டாமா?' என்று பிரஸ்தாபித்தார். அதற்குக் கிருஷ்ணமேனவன், இந்துலேகையின் வித்தியாப்பியாசம் இன்னும் பூர்த்தியாகவில்லையென்றும், அது முடிந்தபிறகே அவளுடைய விவாகத்தைப்பற்றி ஆலோசித்தாற்போதுமென்றும், இந்துலேகையை அவளுடைய ஸ்திரீஜாதிக்கும் அந்தஸ்துக்கும் தகுதியாகத் தக்கவிதமாய் நடந்துகொள்ளும்வண்ணம் அவளைக் கல்வியிற்பயிற்றுவதே தனக்கேற்பட்ட முதற்கடமையென்றும், அந்த முயற்சி கைகூடினால், பிறகு அவளைப்பற்றிய விவகாரங்களிலெல்லாம் அவளே பிரவர்த்திக்கத் தகுமென்று இந்துலேகையை பத்திரமாய் நம்பி விட்டுவிடலாமென்றும் சொன்னார். கிருஷ்ணமேனவனுடைய கருத்து முழுவதையும் அந்தக்கிழவர் தெரிந்துகொண்டாரோ இல்லையோ, அப்படித்தெரிந்துகொண்டிருந்தால் அதை அங்கீகரித்தாரோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் அவ்விஷயத்தைப்பற்றிப் பிறகு அவர் தன்மகனைக் கேட்கவேயில்லை.

(இன்னும் வரும்.)

# புத்தகக் குறிப்பு

## REVIEWS OF BOOKS

ஸ்ரீஸ்கந்தபுராணச் சுருக்கம்.* —(விலை அணா 10 இராமநாதபுரம் வித்வான் மாப்பிள்ளை வி. தங்கவேலு ஸ்வாமித் தேவர் இயற்றியது). ஸ்கந்தபுராணம் ஸம்ஹிதைகளென்ற பெயரையுடைய ஆறு பெரிய பாகங்களை உடையது. அவைகளின் பெயர் முறையே ஸநத்குமார ஸம்ஹிதை, ஸூதஸம்ஹிதை, சங்கரஸம்ஹிதை, விஷ்ணு ஸம்ஹிதை, பிரம்மஸம்ஹிதை, ஸூர்யஸம்ஹிதை ஆகிய இவைகளே. இவைகளுள் சங்கரஸம்ஹிதை என்று சொல்லப்படுவதே ஸுப்ரஹ்மண்யருடைய அற்புதச் செயல்களைக் கூறுவது. ஆகையால் இந்த ஸம்ஹிதையையே தமிழில் கந்தபுராணமாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த சங்கரஸம்ஹிதையைத்தான் தேவரவர்கள் மிகுந்த இனிமையாயும் அதிக கடினமில்லாததாயும் உள்ள தமிழில் சுருக்கமாகவும் விஷயங்கள் ஒன்றும் விட்டுப்போகாமலும் எழுதி இருக்கின்றார். இதுகாறும் விரிவாக இருந்து பலராலும் எளிதில் வாசிக்கமுடியாத சங்கர ஸம்ஹிதையை இவ்வாறு எழுதி வெளியிட்டதற்கு நாம் எல்லோரும் தேவரவர்களிடத்தில் நன்றிபாராட்டவேண்டியது அவசியமே. மேலும் இச்சுருக்கத்தில் உற்பத்தி விஷயங்களைப்பற்றிச் சொல்லும் உற்பத்திக்காண்டம் அஸுரகாண்டம் என்பவைகளில் சிறுவர்களும் சிறுமிகளும் வாசிக்கத்தகாத விஷயங்களைவிட்டு கதைக் கோர்வைவிடாது வெகு சாதுரியமாக எழுதப்பட்டிருக்கிறது. இப்புத்தகம் எல்லோருக்கும் ஆனந்தத்தை விளைவிக்குமென்பது எங்கள் துணிபு. தேவரவர்கள் தமிழில் இன்னும் வெளிவராத மற்றைய ஸம்ஹிதைகளையும் எழுதி வெளியிடுவாராயின், இப்பொழுது அவர் செய்யத்தொடங்கிய பேருதவி முற்றும் முடிவுபெற்றதாகும்.

பாலகங்காதர திலகர்.* (சுருக்கமான ஜீவ்யசரிதம் விலை அணா 4 தான்). இச்சிறுபுத்தகத்துள் மஹாத்மா பால கங்காதர திலகரைப்பற்றி எவ்வளவு சொல்லமுடியுமோ அவ்வளவும் சொல்லப்பட்டிருக்கிறது. முன்பாகங்களில் அவர் இளம்பிராயமுதல் இவ்வாறு அநேகவிதமாக ஜனங்களது பொதுநன்மைக்கே உழைப்பவராய் இருந்தார் என்பதையும், நூதனமாக நமது தேசத்தில் அப்பொழுது தொடங்கியிருந்த ஆசாரச் சீர்திருத்த விஷயத்தில் அவருக்கு இன்ன அபிப்பிராயம் இருந்தது என்பதையும், அதன் மூலமாக கண்மூடிகளாய் ஆசார சீர்திருத்தங்களை திடீரென்று உண்டாக்கவேண்டும் என்ற ஆத்திரக்காரரால் அவர் இவ்வாறு தாக்கப்பட்டார் என்பதையும், பின்பு ஸ்வதேசியம் உண்டானகாலத்து அவர் தமது எண்ணமே ஜனங்கள் மனதில்தோன்றி இவ்வாறு வெளியாயிருக்கின்றது என்று அதை ஸந்தோஷமாக

அங்கீகரித்து அதற்கு கூசாத தலைவராஞர் என்பதையும் நன்றாகக் காட்டி இருக்கிறது. மேலும் திலகரது மனோதிடம், கருமமே கண்ணா யிருக்குந்தன்மை முதலியவைகளை நன்கு வெளிப்படுத்த ஸூரத் காங்கிரஸில் 1907 வருஷத்தில் நடந்த கலகத்தின் கதை, திலகர் கவர்ன்மெண்ட் உத்தியோகவிஷயத்தை விசாரிக்கவந்த ஸங்கத்தார்முன் கொடுத்த வாக்குமூலம், முதலியவைகளையும் எடுத்து எழுதப்பட்டிருக்கிறது. மேலும் ஸ்வதேசாபிமானிகளின் (அமிதவாதிகள் என்றபெயர் அவ்வளவு தகுந்ததல்ல) கொள்கையைத் திலகர் செய்த ஸ்வதேசிகளின் ஸித்தாந்தம், ஸத்திய நோக்கம், ஸிவாஜிக் கொண்டாட்டம், எங்கள் மார்க்கங்களும் ஒற்றுமையும், என்ற உபந்யாஸங்கள் மூலமாகவும் நேராகவும் அழகாய் இப்புத்தகத்தில் வெளியிட்டிருக்கிறது. முடிவில் ஸ்வதேசீயத்திற்கு திலகர் சிந்திக்கும் ஸ்ருஷ்டிகர்த்தர் என்று விஷயத்தைவற்புறுத்தி இருக்கிறது. இச்சிறுபுத்தகத்தை எழுதி ஸாதாரண ஜனங்களுக்கும் திலகமஹாத்மாவின் அற்புதசரிதையை எளிதில் புலப்படும்படி செய்த ஸ்ரீ ஈசுவருக்கு தமிழ் பேசுவோர் யாவரும் அவசியம் நன்றிஅறிதல் உடையவராய் இருத்தல்வேண்டும். இப்புத்தகம் தமிழ்பேசுவோன் ஒவ்வொருவன் வீட்டிலும் அவசியம் இருத்தல் வேண்டும். இதைச் சிறந்த நூல்களுளொன்றாக நாம் பாவிக்கவேண்டும். இப்புத்தகத்தை எல்லோரும் வாங்கி ஆதரிப்பாராக.

யசோதரகாவ்யம்.—*(பண்டித வெங்கடராமஅய்யங்கார் அவர்களால் இயற்றப்பட்டது. விலை அணா 8). இது ஐந்து பாகங்களையுடைய ஒரு ஜைன நூல். முதற்பாகத்தில் ஔதேய தேசத்து மாரிதத்தன் என்ற அரசன் காளிக்கு அபயருசி அபயமதி ஆகிய இருவரையும் நரபலிகொடுக்க எண்ணி வாளைவீசிக்கொண்டு வருகையில், அவர்களிருவரும் நகைக்க, அவர்களை வெட்டாது நிறுத்திவிட்டு, அவர்கள் சிரித்ததன் காரணத்தைக் கேட்டகாலத்தில், அவர்கள் தமது பூர்வஜன்மவரலாறாகிய யசோதரசரித்திரத்தைசொல்லத் தொடங்கிய இக்கதையின் வரலாறு விவரிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாம்பாகம் யசோதரன் பிறப்பு அவன் ராஜ்யம் ஆண்டவிதம், அவன் மனைவி பாபருஷனை இச்சித்துக் கெட்டதால் அவனுக்குண்டான வியாகூலம்தீர மாவால்செய்த கோழியை தாயின் புத்திமதிப்படி அவன் காளிக்கு பலிகொடுக்க, அந்த பாபத்திற்காக அவனும் அவன் தாயும் அவன் பெண்சாதியால் விஷம் வைத்துக் கொல்லப்பட்டது ஆகிய இக்கதையைச் சொல்வது. மூன்றாம் பாகம் யசோதரனும் அவன் தாயும் இறந்தபின்னர் முறையே மயில்: நாய்: முள்ளம்பன்றி: கரும்பாம்பு: மீன்: முதலை: ஆடு: மாடு: கோழிகள்: ஆகிய விலங்குகள் பறவைகள் முதலிய தாழ்ந்த ஜன்மத்தில் சுழன்று தமது பாபபலனை அனுபவித்த ஒழுங்கை வெளியிடுகின்றது. நான்காம் பாகம் கடையிசில் கோழி ஜன்மத்தில் இவ்விருவரும்தமது பிள்ளை யசோமதியின் தோட்டத்தில் கூண்டுகளில் இருக்க, அப்பொழுது அங்கிருந்த அகம்பனயோருக்கும் யசோமதியின் தளவரன் சண்டகருமனுக்கும் நடந்த ஞானஸம்பாஷணையைக் கேட்டுத் தெளிந்து சந்தோஷத்தால் கொக்கரிக்க, அதனால் குறைத்தூக்கத்தில் எழுப்பப்பட்ட யசோமதியால் அவர்கள் இறந்து யசோமதிக்கே அபயருசி என்ற பிள்ளையும் அபயமதி என்ற பெண்ணுமாகப் பிறந்து நற்கதி யடைந்த கதையைக் கூறுகிறது. யசோமதி அரசன் ஜீனதீக்ஷை பெற்று ராஜ்யம் நீங்கித் தவஞ் செய்யச் சென்றதையும், பின்பு அபயருசி தனது தம்பியினிடம் ராஜ்யத்தை ஒப்புவித்து தவக்கோலங்கொண்டு தனது தங்கையோடு வந்ததையும் அப்பொழுது தமக்கு வந்த ஆபத்தையும் எடுத்துரைக்க மாரிதத்தன் தெளிந்து நல்லொழுக்கத்திற்கு வந்து நற்கதி அடைந்ததையும் ஐந்தாம் பாகம் கூறுகின்றது. இக்கதை அஹிம்ஸாப் பரமோதர்ம: என்ற அருமையான வேதக்கொள்கையின் சிறப்பையும் அதன்படி நடவாமலிருந்தால் விளையும் தீங்கையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றது. இப்புத்தகத்தை வாசிப்பவருக்கு ஜைனர்கள் உண்டானதால் வைதிகமதத்தின் சிறப்பு எவ்வாறு வெளிப்பட்டு விளங்கியது என்பது நன்றாகத் தெரியவரும். இவர்களாலேயே தான் அஹிம்ஸாப் பரமோதர்ம: என்ற வேதக்கொள்கையின் சிறப்பு பலர் அறிய வெளிவந்து நம்முள் இருந்த மாம்ஸபக்ஷணம் முதலிய கெட்ட காரியங்களை நிறுத்திவிட்டது. இந்தச் சிறப்பை இக்கதை வெளியாக்குகிறது. இதை அச்சிட்டிருக்கும் பண்டிதர் அவர்களும் ஜைனமதம் முதலிய பொது விஷயங்களைப்பற்றியும் கதையின் சுருக்கம் முதலியவைகளைப் பற்றியும் இக் காவ்யத்தின் ஆரம்பத்தில் நன்றாக எழுதியிருக்கிறார். இவைகளின் ஸஹாயத்தை வைத்துக்கொண்டு காவ்யத்தை எளிதில் வாசித்து உணரலாம். தமிழ் பாஷையில் விசேஷப்ரீதி உடையவர்கள் வீட்டில் இப்புத்தகம் ஒன்று இருத்தல் அவசியம்.

1. பீமலா:—* (ம-ள-ள-ஸ்ரீ, R. P. குலந்தஸாமி பிள்ளை B. A. L.T. யவர்கள் இயற்றியது-சைகான் சின்னயா அச்சுக்கூடம்’ புதுவை.) இது ஆக்பர் காலத்து விளக்கும் கதை. இராஜாங்கத்தார் தாம் செய்த தப்பைத் தெரிந்து அதை ரத்து செய்து நியாத்தை ஸ்தாபித்ததை விளக்குகின்றது. நற்குணமுடையவன் கொடியனை அழிக்க ஆவேசம் கொண்டு, பிரதிக்ஞை செய்து, எளியோரைக் காக்கவாக்களித்து, அதுவே தன் ஆவேசக்காரியத்திற் றடங்கலாக, மனம் திகைத்து கடைசியாக அன்பெனு மருந்தால திகரிக்கப்பட்டு கொடியவனுடைய கொடுமையை அழித்து அவனைத் தான் செய்த தப்பிற்கு அபராதமடையும்படி தர்மஸ்தாபனம் செய்வதே இதன் மூலக் கருத்து. தீமை அழியும் நன்மை வளரும் என்பது நன்குவிளக்கப்பட்டு இருக்கின்றது.

* இப்புத்தகம் வேண்டுவோர், “விவேக போதினி” மேனேஜருக்கு எழுதிக்கொள்ளவும்.

பீமலாவின் அன்பெனும் வேதியராலாதரிக்கப்பட்டு செய்நன்றி மறவாது தருமவழியே நாடி வீரத்தையும் ஸத்யத்தையும் நாட்டிய இந்திராதித்தன், விசுவாசகாதகனுகிய குணமென்னுங் காந்தத்தினல் கிரஹிக்கப்பட்டு குரூரவழியைநாடி நல்லோரைக் கெடுக்க எண்ணம் கொண்ட சிக்சிந்தன்—இவ்விரண்டு பேரின் குணமும் அதற்குள்ள ஏற்றத் தாழ்வும் ஒவ்வொரு விஷயத்திலுமறியலாம்; மஹாகிதையின் சாயகவாஞ்சையு மதனுலுண்டான வீராவேசமும் இந்திராதித்தனுடைய ஆத்மத்தியாகமும், இரக்க குணமும், பீமலாவின் பித்ருவாஞ்சையும் ஆத்மத்யாகம் இவைகளோடு நடுநடுவில் சாராலாவின்மெல்லிய மொழியும் சாந்த குணமும் நம் மனதிலானந்தத்தை நிறைத்து விடுகின்றன. சகுணன்கொடுமை அவனைக் கொலைசெய்ய உத்தரவளித்தான் என்றது ஒழிந்தான் பாபி என்று தோன்றும்படி செய்துவிடுகின்றது. இக்கதைஸ்ரீமான் ரோமேஷ்சந்திரதத்தரால் பங்காளியி லெழுதப்பட்டதைத் தமிழில் ம-ா-ா-ஸ்ரீ குழந்தை சாமியார் எழுதி இருக்கிறார். நடை முதலியன நன்ருய் இருக்கின்றது. விலையும் ஆறு அணு தான். எல்லாரும் வாங்கக் கூடியதே.

"இந்துசாஸ்திராபிமானி"—"இந்து சாஸ்திராபிமானி" எனப் பெயர்கொண்ட இப்புத்தகம் சென்னையில் பிரசுரஞ் செய்யப்படும் "லோகோபகாரி" என்னும் பத்திரிகைக்கு கல்லடைக்குறிச்சிம-ா-ா-ஸ்ரீ முத்துகிருஷ்ணய்யர் நாளாவர்த்தியில் எழுதிவந்த அருமையான ஸமாசாரங்கள் அனைத்தையும் அடக்கியுள்ளது. "பிரம்மைவஸத்தியம்," "ஸம்சாரபந்தம்," "ஈச்வரபக்தி" முதலான வேதாந்த விஷயங்களையும், "கேரளரகசியம்" முதலிய தேசாந்தர நடையுடைபாவனையின் விவரங்களையும், "பிராசீன ஆசாரம்," "முயற்சி," "பெண்கல்வி," "அஜாமளன்" இவைபோன்ற முக்கியமான சில்லரை நீதிகளடங்கிய உபந்நியாசங்களையும் வெகுபரிஷ்காரமாய் எல்லாரும் வாசித்தறியும்படி எளியநடையில் எழுதி, நல்லகாகிதத்தில் அச்சிட்டு ஸுலபமான விலைக்கு விற்கப்படுகிறது. பெண்பாலர் பலரும் வாசித்தறியவேண்டிய ஸமாசாரங்கள் இதில் ஜாஸ்தியாயிருக்கிறபடியால், எல்லோரும் இதை வாங்கி வாசித்து ஆனந்திப்பார்களென்று நம்புகிறோம்.

## புத்தக வரவு

## BOOKS RECEIVED

ராஜாங்கமும் தேசாபிமானமும் ம-ா-ா-ஸ்ரீ C. சுந்தரமய்யரவர்கள். B.A., எழுதியது. மெஸ்ஸர்ஸ் ஸ்ரீனிவாஸ வரதாசாரி அண்டு கம்பெனியாரவர்களால் தெளிவாய் அச்சிடப்பட்டது. விலை அணு 3



அச்சிலிருக்கிறது. சீக்கிரம் வெளிவரும்.

# நளோபாக்கியானம்

பண்டித S. M. நடேச சாஸ்திரியார்.

சமஸ்கிருதத்தில் வியாசபகவான் எழுதிய பாரதத்தி லுள்ளதுள்ளமாதிரி தமிழில் சரளமான நடையில் மனஸுக்கு சந்தோஷமுண்டாகும்படி மொழிபெயர்த்திருக்கிறார். இதில் தமயந்தி நளனைக் கலியாணம் செய்துகொண்டு கலிபுருஷனுடைய கொடுமையால் நாடையிழந்து காட்டில் கணவனை விட்டுப் பிரிந்து கஷ்டம் பல அடைந்து பாதி விரத்யத்தைக்காத்து தன்பெருமையையும் தன் கணவன் பெருமையையும் காட்டி நம்மையும் மேன்மையடையும்படி செய்கையால் காட்டிய நிலைமை விவரிக்கப்பட்டிருக்கிறது.

நடேச சாஸ்திரியார் எழுதிய புத்தகங்களின் பெருமை உலகப்பிரஸித்தம். நாம் அதிகமாய் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை.

வேண்டுவோர், சென்னை, மைலாப்பூர், ஜெனரல் ஸப்லைஸ் கம்பெனியாருக்கெழுதி தங்கள் பெயரை ரிஜிஸ்டர் செய்துகொள்ளலாம்.

---

தயாரா யிருக்கிறது! தயாரா யிருக்கிறது !!

## 1908-வருஷத்து I-வது ஆக்ட்

பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப் பற்றிய

## சென்னப்பட்டணம் 1908 வருஷத்து ஆக்ட் (தமிழ்)

சென்னை கார்டியன் அச்சுக்கூடத் தலைவரால் டெம்மி, 8-பேஜ்சைஸில் திடமானகிளேஸ் காகிதத்தில், தமிழிலும் இங்கிலீஷிலும் அச்சிடப்பட்டிருக்கிறது.

இங்கிலீஷ் காப்பி 1-க்கு விலை 0 8 0.

தமிழ்க் காபி 1க்கு விலை அணு 6.

வி. பி. தபால்சார்ஜு பிரத்தியேகம்.

இந்தப் புஸ்தகம் பூஸ்திதிகளையுடைய ஒவ்வொருவரிடத்திலும் அவசிய மிருக்கவேண்டியது. தேவையானவர்கள் அடியில் கண்ட விலாசத்துக்கு உடனே யெழுதிக் கொள்ளவும்.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பேனி,
மைலாப்பூர், மதறாஸ்,

இந்தப்புத்தகத்துக்கு ஆர்டர்செய்பவர் இப்பத்திரிகையின் பெயரைக் குறிப்பிடவும்.

# V. Kalyanram Iyer & Co., BOOK-SELLERS, ESPLANADE, MADRAS.

மஹாபாரதம்

## சாந்திபர்வம்.

கும்பகோணம்

பிரும்ம ஸ்ரீ பாரத சாமாசாரியாரவர்களால்

எளிய தமிழ்நடையில் மொழி பெயர்க்கப்பட்டு,

பிழையறப் பரிசோதித்து

நல்ல காகிதத்தில் பெரிய எழுத்தில் அச்சிட்டு காலிகோவில் நன்றாய்ப் பயிண்ட் செய்திருக்கிறது.

இப்பொழுது தயாராயிருக்கும்

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பாகம் ... ... ரூ. | 2 | 0 | 0 |
| அச்சிலிருக்கிற 2-ம் பாகம் ... | 2 | 0 | 0 |
| இப்பொழுதே இரண்டாம் பாகத்துக்கும் சேர்த்து முன்பணம் அனுப்புகிறவர்களுக்கு ... ... ... | 3 | 0 | 0 |

"அதிப்பிரஸித்தர்களாகிய ஸ்ரீமத் பாகவதம் சாமண்ணாசார்யாரவர்கள் தமிழில் மொழி பெயர்த்து வைத்திருக்கும் ஸ்ரீ மஹாபாரதம் சாந்திபர்வத்தின் வசன நடையிற்சில பாகங்களை படித்துப் பார்த்தேன். அவை பொருட் சிறப்புற்று மிக்க இன்பத்தை விளைவிக்கின்றன. இதுபோன்ற ஸரியான மொழிபெயர்ப்பைத் தமிழ் நாடு இதுவரையிற்பெற்றிலதென்று சொல்லலாம்.

பாரதத்தில் இப்பர்வமானது பலவகைப்பட்ட தருமங்களையும் உபாக்கியானங்களையும் தெரிவிக்கும் ஸாரமான பகுதியென்பதும் அவற்றைத் தெரிந்து கொள்ளுதல் இரு பாலார்க்கும் பெரும் பயனை விளைவிக்து மென்பதும் யாவரும் அறிந்த விஷயங்கள். வடமொழிப் பயிர்ச்சியில்லாதவர்கள் மேற்கூறியவற்றைத் தெரிந்துகொள்ளுதற்கு இம்மொழி பெயர்ப்பைப் போன்ற சிறந்த கருவி வேறேயில்லையென்பது திண்ணம். * * *"

இங்ஙனம்,

19-10-1907. வே. சாமிநாதையன்,

*Pundit Presidency College, Madras.*

| | | | |
|---|---|---|---|
| நாலாயிர திவ்யப்பிரபந்தம்.---640 பக்கம் ... ... ... | 3 | 0 | 0 |

இப்பதிப்பு (1) ஆழ்வார்களின் காலவைபவக் குறிப்பும், (2) ஆழ்வார்கள் அருளிசசெய்த பிரபந்தங்களின் அட்டவணையும், (3) ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திவ்விய தேசங்களின் அட்டவணையும், (4) அந்த தேசங்களின் வைபவக்குறிப்பும், (5) பாசுரங்களின் முதலடி அகராதியும் (6) பாடபேதக் குறிப்புகளும் சேர்த்துபலபிரதிகளுடன் ஒத்திட்டுப்பார்த்து, நன்றாய் அச்சிடப் பெற்றுளது.

| | | | |
|---|---|---|---|
| மனுதர்மசாஸ்திரம் 2647 கிரந்த சுலோகங்களும் அவைகளின் தமிழ் மொழி பெயர்ப்பும்—560 பக்கம் ... | 2 | 4 | 0 |
| ஸ்திரீ புருஷசாமுத்ரிகாலட்சணம்... | 1 | 0 | 0 |

## ஸ்ரீமத் வால்மீகி ராமாயண வசனம்

பண்டித-நடேச சாஸ்திரியாரால்

தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு,

தேர்ந்த தமிழ் வித்வான்களால் பார்வையிடப்பட்டு, பிழையறப் பரிசோதித்துப்

பதிப்பிக்கப்பட்டது.

ஸ்திரீகளும் சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ்வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது. இப்பதிப்பு இதன் ஆதிகிரந்தத்தின் கௌரவத்திற்கும் மகிமைக்கும் தக்கவாறு கனமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில் பிழையறப் பரிசோதித்து, செவ்வையாய் அச்சிட்டு நேர்த்தியான காலிகோவில் அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

### தயாராயிருக்கும் காண்டங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| பாலகாண்டம் ... ... | ரூபா. | 1 | 12 | 0 |
| அயோத்தியாகாண்டம் ... | ,, | 3 | 0 | 0 |
| ஆரணியகாண்டம் ... | ,, | 1 | 12 | 0 |
| கிஷ்கிந்தாகாண்டம் ... | ,, | 1 | 12 | 0 |
| 4 காண்டமும் சேர்த்துவாங்கினால் | ,, | 7 | 4 | 0 |

மற்றய காண்டங்கள் இப்பொழுது விரைவாய் அச்சிடப்பட்டு வருகின்றன. சீக்கிரம் வெளிவரும்.

### இதரத் தமிழ்ப் புத்தகங்கள்

நன்றய்ப் பார்வையிட்டு நல்ல காகிதத்தில் தெளிவாய் அச்சிட்ட சிறந்த பதிப்பு.

| | | | |
|---|---|---|---|
| மூவர் தேவாரம்-பண் முறை---1044 பக்கம் ... ... ... | 3 | 0 | 0 |

இப்பதிப்பில் (1) சம்மந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவர்களின் சரித்திரக் குறிப்பும், (2) தேவாரவரலாறும், (3) தேவாரப்பண் அட்டவணையும், (4) தேவாரப்பாடல்பெற்ற ஸ்தல அகராதியும், (5) தேவார ஸ்தலங்களுள்ள நாடுகளின் விபரமும், (6) அட்டவீரட்டானங்களைக்குறிப்பிக்கும் செய்யுளும், (7) தேவாரப்பொப்து பாடல்களின் பக்க அட்டவணையும், (8) தேவார வைப்பு ஸ்தல அட்டவணையும், (9) காரைக்காலம்மையார் அருளிச்செய்த மூத்த திருப்பதிகமும் நூதனமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன.

### வேதாந்த விஷயமான் புஸ்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| வாசுதேவ மனனம் ... ... | 1 | 0 | 0 |
| சிவபோகசாரம் & சிவஞானவிளக்கம் | 0 | 2 | 0 |
| சுகர் கைவல்லியம் ... ... | 0 | 2 | 0 |
| வைராக்கிய சதகம் ... ... | 0 | 2 | 0 |
| ஜன்மாந்திரம் (அல்லது இராமதாசர் உபவள்ளலார் சாஸ்திரம் ... ... | 1 | 8 | 0 |
| மகாராஜா துறவு ... ... | 0 | 6 | 0 |
| தாயுமானவர்பாடல் ... ... | 0 | 12 | 0 |
| வேதாந்தபோதினி ... ... | 0 | 8 | 0 |

வி கல்யாணராமய்யர் அண்டு கோ., புக்ஸெல்லர்ஸ், எஸ்பிள்னேட், சென்னை,